# பரத சேனாபதீயம்

மூலமும் உரையும்
(குறிப்புரையுடன்)

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ.வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-600 090
1992

# பரத சேனாபதீயம்

மூலமும் உரையும்
(குறிப்புரையுடன்)

பதிப்பாசிரியர்
ஸ்ரீ எஸ். கலியாணசுந்தரையர்

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-600 090
1992

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலைய
வெளியீடு எண். 1

முதற் பதிப்பு : 1944
இரண்டாம் பதிப்பு : 1958
மூன்றாம் பதிப்பு : 1992

பிரதிகள் : 1000

© மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
பெசன்ட் நகர், சென்னை-600 090.

விலை : ரூ. 12

அச்சிட்டோர் :
மாருதி அச்சகம்,
178, பீட்டர்ஸ் ரோடு,
சென்னை-600 014.

# பதிப்பாளர் குறிப்பு

உலகில் நாட்டியங்கள் பலவகைப்படும். பரதம், கதக், கதகளி, குச்சிபுடி, யக்ஷகானம், பாகவத நாடகம், மணிப்புரி, ஜாவா நாடகம் என்பன போன்று எத்தனை எத்தனையோ நாட்டியங்களைக் கண்டு களித்து வருகின்றோம். அவற்றுள் இலக்கண அமைதியும், நிலையான தரமும் உள்ள நாட்டியம் பரதமே என்று கூறலாம்.

பரதம்—இது, பாவ ராக தாளம் என்னும் மூன்றின் முதலெழுத்துக்களைத் திரட்டி இட்டபெயர். இம்மூன்று எழுத்துக்களும் பிரணவ விகாரமெனவும் இவற்றிற்குப் பிரமன் முதலிய மும்மூர்த்திகளும் அதிதேவதைகள் எனவும் கூறுவர். இப்பரதம் பாவ ராக தாள வகையால் மூன்று வகைப்படும். பகாரம் பாவமாகும்; ரகாரம் ராகமாகும்; தகாரம் தாளமாகும்; மகாரம் சுருதியாகும். இவை நான்கும் சேர்ந்தது பரதம்.

பரத இலக்கணத்தைப் பற்றி இந்நூல் செய்யுட்கள் 3—10, விளக்கமாகக் கூறுகின்றன. பரதம் என்பது சகல ஜீவர்களிடத்திலும் (பாவ ராக தாளமென்றும்) விளங்கி வருகின்றது. அவயவ சேஷ்டைகளினாலே பாவமென்றும், கண்டத்தொனியினாலே இராகமென்றும் கூறப்படுகின்றன. இதுவே பரதமென்றும் ஆதியில் பார்வதிக்குப் பரமசிவன் கூறியது. கணநாதராகிய நந்திகேசுவரர் நாட்டியம், நிருத்தியம், நிருத்தம் என்ற மூன்றினுள் ஒவ்வொன்றையும் உத்தான தாண்டவம், சுகுமாரலாசியம் என்று இருவகை செய்து அவற்றையும் கஞ்சக்கருவியாதி வாத்திய இலக்கணங் களையும் பிருங்கிமுனி, உருத்திர கணிகையர் அவர் புத்திரர் முதலியோர்க்கு உபதேசித்தனர். இந்நூலுள்,

''வியக்தம் பூரணம் சுகுமாரம் அலங்கிருதம்
சமம் சுரகதம் சிலக்ஷணம் நிக்ருஷ்டம்
மதுரம் பிரகடனம் பத்தும் புகரம்''

என்று நாட்டியத்தின் பத்து அழகுகள் கூறப்பட்டுள்ளன சாந்தோக்கிய உபநிடதத்தில் பார்வதி ஆடலாசிரியையாய் இருந்து தாளம் போடப் பரமசிவன் நிருத்தம் செய்தார் என்று கூறப்பட்டுள்ளது.

## நாட்டியச் சிறப்பு

ரிக் வேதத்திலிருந்து வாத்தியமும், யசுர் வேதத்திலிருந்து அபிநயமும், சாம வேதத்திலிருந்து கானமும், அதர்வண வேதத்திலிருந்து ரஸமும் ஆகிய நான்கினையும் எடுத்துப் பிரமன் ஒரு சாஸ்திரத்தை உண்டாக்கி, அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பேறுகளையும் தருமென்றும், அலைமோதும் துக்கம், பயம், சோகம் வெறுப்பு; தீமைகளைக் கொடுக்கும் வேற்றுமை ஆகியவைகளை நீக்கி வலிமையுள்ள ஆனந்தத்தைத் தரும் என்றும் சொல்லி வாழ்த்தினான்.

ஆதிகாலத்தில் பரமசிவன் நடனம், நாட்டியம், தாண்டவம், நிருத்தியம், நிருத்தம் என்று ஐவகையாகச் சக்திகள் நிமித்தம் உலகத்தில் ஆடியருளினதாகப் பரத சேனாபதீயம் கூறுகின்றது.

ஆடூஉ, மகடூஉ வேடம் தரித்துக்கொண்டு நடிப்பதை நடனம் எனவும், பெண் புருட வேடம் தரித்துக்கொண்டு நடிப்பதை நாட்டியம் எனவும், ஆண் ஆணாகவே நடிப்பதை நிருத்தியம் எனவும், பெண் பெண்ணாகவே நடிப்பதை நிருத்தம் எனவும், பரமசிவனே தாண்டவாதிபதி எனவும் கூறுகின்றனர். அருணகிரிநாதர் சிவபெருமானைப் பரத சாத்திர குருவாகத் திருப்புகழில் கூறிப்போந்துள்ளார்.

பல தமிழ் நூல்களைத் தேடி அச்சுவாகனம் ஏற்றித் தமிழுலகத்திற்குத் தந்த டாக்டர் ஐயரவர்கள் இசைப் பரம்பரையில் தோன்றியவர். ஆதலால் சுவடிகளைத் தேடும்

போது தமக்குக் கிடைத்த இசை நூல்களையும் சேகரித்து வந்து, இயற்றமிழ் நூல்களைப் பதிப்பித்தபின் இசை சம்பந்தமான நூல்களையும் பதிப்பிக்க வேண்டும் என்று நினைத்து ஆய்ந்து வைத்துள்ளதில் பரத சேனாபதீயமும் ஒன்று. அவருடைய ஆயுட்காலத்தில் இந்நூலைப் பதிப்பிக்க முடியாமல் போகவே ஐயரவர்கள் பெயரால் தோன்றிய நூல் நிலையத்தில் அவரது குமாரர் திரு. கலியாண சுந்தரையர் அவர்கள் இதனை 1944 ஆம் ஆண்டு நூல் நிலைய முதல் வெளியீடாகப் பதிப்பித்தார்கள். மறுபதிப்பு 1958 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

பல அன்பர்களின் வேண்டுகோளுக்கு இணங்க இப்பொழுது நூல் நிலையம் பொன்விழா ஆண்டில் மூன்றாம் பதிப்பாக வெளிவருகின்றது. 1944 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதச் செந்தமிழில் வந்துள்ள சில அரிய திருத்தங்களை இப்பதிப்பில் செய்துள்ளோம்.

பெசன்ட் நகர்<br>
சென்னை -90<br>
21-12-1992

வித்துவான் சு. பாலசாரநாதன்<br>
ஆராய்ச்சித் துறைப்பிரிவு,<br>
டாக்டர் உ. வே. சாமிநாதையர்<br>
நூல் நிலையம்

# முன்னுரை

ஸ்ரீ மஹாமஹோபாத்யாய டாக்டர் உ. வே சாமிநாதையர் வெளியிட வேண்டுமென்று கருதித் தம் கையால் திருத்திப் பரிசோதித்து வைத்துள்ள ஒரு நூலுக்கு முன்னுரை அவசியமே இல்லை என்றாலும் கலாக்ஷேத்திரத்தின் மூலமாகப் பதிப்பிக்கப்படும் முதல் நூல் இஃது ஆதலால் இரண்டொரு வரிகளை எழுதத் துணிந்தேன்.

சிறு வயதிலிருந்து தமிழ்க் கவிகளிடத்திலும், தமிழ்க் காவியங்கள்பாலும் எனக்கு மிக்க அபிமானம் உண்டு. ஆனால் அனேக வருஷங்களாக எனக்கு ஏற்பட்ட வெளியூர்ப் பிரயாணங்களாலும், வேறு பல காரியங்களாலும் இதனை அபிவிருத்தி செய்ய ஸந்தர்ப்பம் ஏற்படவில்லை. அப்படியிருந்தும் மஹாமஹோபாத்தியாய சாமிநாதையரைப்பற்றி நான் கேள்வியுற்றிருந்தேன். என்னுடைய தகப்பனார் அவரோடு நெருங்கிய பழக்கம் உள்ளவர். ஆதலால் அவருடைய உயர்ந்த குணத்தைப்பற்றி எனக்கு ஒருவாறு தெரியும். ஆனால் நாட்டியத்தின் மூலமாகவேதான் இந்த நல்ல காரியம் செய்கிற பாக்கியமும் கிடைத்தது. நாட்டியம் செய்யத் தொடங்கி நான் கலாக்ஷேத்திரத்தை ஸ்தாபித்த பிறகு அனேக நூல்களைப் பதிப்பிக்க ஏற்பாடு செய்தேன். தமிழில் மஹாமஹோபாத்தியாயர் கைபட்டு வந்த நூலைத்தான் முதன் முதல் பதிப்பிக்கவேண்டும் என்று உறுதியாய் நினைத்தேன். சென்ற வருஷம் அவருடைய குமாரர் ஸ்ரீ கலியாணசுந்தரையரைப் பார்த்துக் கேட்டபொழுது, அவரும் அதேசமயத்தில் அடையாற்றுக்கு வந்து என்னோடு பேசி வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தார். இதுவும் தெய்வ சம்மதமான காரியம் என்று தெரிந்துகொண்டேன்.

எனக்கு எப்பொழுதுமே ஓர் ஆசை உண்டு. அது மஹாமஹோபாத்தியாயர் ஆராய்ச்சி செய்து வந்த பரத சாஸ்திர சம்பந்தமான தமிழ் நூல்கள் மூலமாகவும், உயர்ந்த வேதாந்த நூல்கள் மூலமாகவும், தமிழ் மொழியின் அழகை உலகெல்லாம் பரவச்செய்யவேண்டும் என்பதே. ஸ்ரீ கலியாண சுந்தரையரும் தம் தகப்பனாரைப்போலவே குணத்திலும், தமிழபிவிருத்தியிலும் உத்ஸாகம் காட்டிவருவதோடு, தம்மிடமுள்ள ஏட்டுச் சுவடிகளை யெல்லாம் இவ்விடம் அடையாற்றில் தம் தகப்பனாருடைய பெயரால் கொணர்ந்து வைத்து எனக்கும் இந்த நல்ல காரியத்தைச் செய்யும் சந்தர்ப்பத்தை உண்டுபண்ணியதும் ஈசுவர சம்மதமே.

பரத சேனாபதீயம் என்ற இந்நூல் சிறியதாக இருந்தாலும், நாட்டிய சம்பந்தமான பல விஷயங்களைச் சொல்லுவதால் ஒரு நல்ல நூல் ஆகும் என்ற காரணம் கொண்டு, கலாக்ஷேத்திரத்தில் இதனை முதன் முதலாகப் பதிப்பிக்க எடுத்துக் கொண்டேன். ஆனால் நாட்டியம், சங்கீதம், ஸாஹித்யம், நாடகம் மற்றுமுள்ள சகல கலைகளையும் பற்றி ஸ்ரீ சாமிநாதையர் சேகரித்துவைத்த அனேக புத்தகங்கள் இருக்கின்றன. இவைகளை யெல்லாம் பதிப்பித்து நமது பாரத தேசத்தின் கீர்த்தியை எங்கும் பரவச் செய்து, ஸ்ரீ சாமிநாதையர் தம் வாழ்நாள் முழுவதும் தம்மை மறந்து செய்துவந்த தமிழ்க் கலாபிவிருத்தியையும் அழியாது காப்பாற்றி மேல்மேலும் வளரச் செய்வதோடு அவருடைய புகழ் எங்கும் பரவவேண்டும்என்னும் நோக்கத்துடன் அவருக்கு இச்சிறு நூலை அன்புடன் அர்ப்பணம் செய்கின்றேன்.

இங்ஙனம்

அடையாறு,<br>
25-2-1944

ருக்மிணி தேவி.

# முகவுரை

## திருச்சிற்றம்பலம்

பாரித்திருந் தடிய னேனான் பரவுவன் பாடி யாடி
மூர்த்தியே யென்ப னுன்னை மூவரின் முதல்வ னென்பன்
ஏத்துவா ரிடர்க டீர்ப்பாய் தில்லைச்சிற் றம்பலத்துக்
கூத்தாவுன் கூத்துக் காண்பான் கூடநான் வந்த வாறே.

திருச்சிற்றம்பலம்

— திருநாவுக்கரசர்.

உலகத்தில் வேதங்கள் தோன்றியபின் அவற்றின் பாதுகாப்பின் நிமித்தம் தனுர்வேதம், ஆயுர்வேதம், அர்த்த சாஸ்திரம், கந்தர்வவேதமென்ற நான்கு உபவேதங்கள் இயற்றப் பெற்றன. ஒரு நாடு நல்ல நிலையில் இருந்து வருவதற்கும் அதன் நாகரிகம், மதம், கொள்கைகள் முதலியவைகள் அழியாமல் வளர்ச்சியுறுவதற்கும் (1) சேனா பலமும், (2) மருத்துவ நூலும், ( ) பொருள் நூற்கலையும், (4) மக்கள்பால் ஆனந்தமும் இன்றியமையாதனவாகும் என்பதை யாவரும் ஒப்புக் கொள்வர். இந்த நான்கும் உபவேதங்களால் பெறப்படுவனவே. இவற்றுள் கந்தர்வ வேதத்திலிருந்து நாட்டியக்கலை தோன்றியது. வாழ்க்கையிலே தோன்றும் ஏமாற்றம், துக்கம், வெறுப்பு முதலியவைகளை மாற்றி மனத்திற்கு அமைதியையும் ஒரே சமயத்தில் கண்ணுக்கும் காதுக்கும் ஆனந்தத்தையும் தரக்கூடிய ஒரு கலையை உண்டாக்கித் தருமாறு இந்திரன் முதலிய தேவர்கள் நான்முகக் கடவுளை வேண்ட அவர், "இருக்கினின்று வாத்தியமும், யஜுர்வேதத்தினின்று அபிநயமும், சாமத்தினின்று கீதமும், அதர்வணத்தினின்று இராகமும் ஆக இந்நான்கினையும் வேதசாரமாக எடுத்துத்திரட்டி" (இந்நூல், பக்கம், 42) நாட்டியமாகச்செய்து கொடுத்தாரென்று நாட்டிய

நூல்கள் கூறும். இது நாட்டிய வேதமென்றும் கூறப்படும். இக்கலை நமது தேசத்தில் மிகப் பழங்காலந்தொட்டு இருந்து வருகிறது.

தமிழ் மொழியினை, ஆன்றோர் இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பிரிவுகளாக வகுத்திருக்கின்றார்கள். ஒவ்வொன்றையும் தனித்தனியே கூறும் நூல்கள் பல இருப்பினும் மூன்றையும் பற்றிக் கூறும் தமிழ் நூல் நமக்குத் தெரிந்தவரையில் சிலப்பதிகாரம் ஒன்றே. இம் முத்தமிழ்க் காப்பியம் சேரர் பரம்பரையினராகிய இளங்கோவடிகளால் இயற்றப்பெற்ற பெருமை வாய்ந்தது. இதிலுள்ள அரங்கேற்றுகாதையில் பரதத்தைப் பற்றிய பல அரிய செய்திகள் காணக்கிடக்கின்றன. ஏறக்குறைய 1800 ஆண்டுகளுக்கு முன் இந்நூல் இயற்றப் பெற்றதாக ஆராய்ச்சியாளர்கள் கூறுதலால், அக்காலத்திலேயே நாட்டியக் கலை தமிழகத்தில் மிகவும் உயர்ந்த நிலையிலிருந்ததென்று உறுதியாகக் கூறலாம்.

பல தமிழ் நூல்களைத் தொகுத்து வைத்துள்ள என் தந்தையாராகிய மகாமகோபாத்தியாய டாக்டர் ஐயரவர்கள் இளமைக் காலத்தில் இசையை நன்றாகப் பயின்றவர்களான தால் இசை, நாடகம் இவை சம்பந்தமான நூல்களையும் கிடைத்தவரையில் தொகுத்து வைத்துள்ளார்கள். அவற்றுள் பரதசேனாபதீயம் என்பதொன்று. அதில் இரண்டு கடிதப் பிரதிகள் 'பரதசேனாபதீயம்' என்று அவர்கள் கைப்பட எழுதிய பெயரோடு உள்ளன. இரண்டும் ஏறக்குறைய ஒரே மாதிரியானவை. இரண்டிலும் அவர்கள் ஆங்காங்கே பல திருத்தங்களைச் செய்துள்ளார்கள்.

நச்சினார்க்கினியரும், சிலப்பதிகாரத்துக்கு உரைவகுத்த அடியார்க்கு நல்லாரும் 'ஆதிவாயிலார் இயற்றிய பரதசேனா

பதீயம்' என்னும் நூலிலிருந்து தத்தம் உரைகளில் சில சில மேற்கோள்களை எடுத்துக் காட்டி யுள்ளார்கள். அவை வெண்பாவில் அமைந்தவை, இந்நூல் பெரும்பாலும் நூற்பாக் களைக் கொண்டது. அன்றி, அவ்வெண்பாக்களுள் ஒன் றேனும் இந்நூலில் இல்லை. அதனால் அது வேறு, இது வேறு என்றும், ஆதிவாயிலார் என்பார்க்குப் பிற்காலத்தவர் ஒருவர் பரத சேனாபதீயம் என்னும் பெயரை அமைத்து இதனை இயற்றியிருக்க வேண்டு மென்றும் தோற்றுகிறது.

கிடைத்த பிரதிகள் மூலத்தையும் உரையையும் கொண் டவை. இந்நூலைக் கவனித்தபொழுது இது சிறந்த தொரு பரத நூலின் பாயிரத்தின் ஒரு பாகமாக இருப்பது புலனாயிற்று. நூல், நுவல்வோன் என்ற பகுதிகள் மட்டும் இதில் அமைந்துள்ளன. நுவல்வோனைப்பற்றிய பகுதி தானும் முடியக் காணப்பெறவில்லை. நூலின் பெயரைப் பற்றியாவது நூலாசிரியர் உரையாசிரியர்களைப் பற்றியாவது அறியத்தக்க குறிப்பொன்றும் இப்பகுதியில் இல்லை. பாயி ரத்தின் பகுதியாக இருந்தபோதிலும் இந்நூலில் பரதத்தைப் பற்றிய பல அரிய செய்திகள் காணப்படுவதால் கிடைத்த அளவு வெளியிடலானேன். தமிழ்ச்சுவடிகள் உள்ள பல நூல் நிலையங்களுக்கு எழுதிக்கேட்டும் இப்பெயருள்ள நூல் ஒன்றும் இல்லை யென்ற பதில் கிடைத்தது.

நூலின் பரப்பு : இந்நூல் மிகவும் விரிவானது. இதன் ஒவ்வொரு பிரிவும் அதிகாரம் எனப்படும். இப்பகுதியினால் தெரியவருபவை அங்க அதிகாரம் (பக்கம், 57, 59) இசை யதிகாரம் (பக்கம், 32), தாளவதிகாரம் (பக்கம், 37) என்பன வாகும்.

நூலாலும் உரையாலும் அறியக்கிடக்கும் வேறு நூல்கள் : இந்நூலின் சூத்திரத்திலும் உரையிலும் பல பரத நூல்களின்

பெயர்கள் கூறப்படுகின்றன. அவை : அநும கடகம், கீதப் பிரபந்தம், கௌரீ கடகம், பரத சாஸ்திரம் (இந்நூலாசிரியரே இயற்றியது, பக்கம், 20), மகாபரதசூடாமணி, மகாபரதம். அன்றியும், பல முனிவரும் தேவரும் பிறரும் பரத கர்த்தாக் களாகக் கூறப்படுகிறார்கள்.

இந்நூலும் சிலப்பதிகாரமும் : இந்நூலாசிரியர் தாண்டவம் ஆனந்த முதல் சுத்தம் ஈறாகப் பன்னிரண்டென்பர். அவற்றுள் இன்ன தாண்டவம் இன்ன கூத்து எனப்படும் என்பர் (பக்கம், 5). சிலப்பதிகாரமும், சுத்தானந்தப் பிரகாசமும் கூத்து வகைகளைப் பதினொன்று என்று கூறுகின்றன; இந்நூல் அவற்றைப் பதின்மூன்று என்று கூறுகின்றது; (சூத்திரம், 2.) ஆனால் பெயர்களை எண்ணும் போது பதின்மூன்று என்ற தொகை இல்லை. அபிநய தர்ப்பணமும் பதின்மூன்றென்றே கூறுகிறது. இக்கூத்து வகைகள் யாவும் சிவபெருமானாலேயே ஆடப்பெற்றவை என்று இந்நூல் கூறாநிற்பச் சிலப்பதிகாரம் இன்ன கூத்தை ஆடியவர் இன்னவர் என்று வேறு வேறு கடவுளரைக் கூறுகிறது. மேலே கூறியவற்றையன்றி இவ்விரண்டு நூல் களிடையேயும் சில ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இந் நூலின் 65, 66-ஆம் சூத்திரங்கள் சிலப்பதிகாரத்தில் அரங்கேற்று காதையிலுள்ள சில அடிகளை யொட்டி அமைந் துள்ளன. உரையும் அந்த அடிகளுக்கு அடியார்க்கு நல்லார் எழுதியுள்ள உரையாகவே தோற்றுகிறது. இரண்டிற்கும் வேற்றுமை அதிகமில்லை. இந்நூலின் நடையை நோக்கும் போது இது சிலப்பதிகாரத்தின் காலத்துக்கு முந்தியதோ அல்லது சம காலத்ததோ என்று கூறுவதற்கில்லை.

உரையாசிரியர் : இந்நூலுக்கு உரைவகுத்தவர் இன்ன வரென்பது தெரியவில்லை. ஆனால் பரதநூலிற் பெரும் புலமை பெற்றவரென்பது மட்டும் நன்கு தெரிகின்றது. மூலத்தால் விளக்கமுறாத பல செய்திகளை இவர் மிகவும்

தெளிவாக இலக்கணங் கூறி விளக்குகிறார் (சூத்திரம், 2, 26, 37, 65, 66.) 'பரத தத்துவத்தை அறியும் அறிவில்லாதாரைச் சிற்றறிவினர் என்றார்' (பக்கம், 50) என்று இவர் கூறுவதனாலும் பரத நூல்களில் இவருக்குள்ள அறிவாற்றல்கள் புலனாகும். நூலாசிரியரும் உரையாசிரியரும் ஒருவரே என்பதற்கில்லை. சூத்திரத்துக்கு நிறுத்த முறை கூறல் சூத்திரம் நுதலியது கூறல், இவற்றை யடுத்துப் பொழிப்புக் கூறல், பதசாரம் கூறல், சில அரும்பதங்களுக்கு உரை கூறுதல் என்பன இவர் மேற்கொண்ட முறைகளாகும். சில சூத்திரங்களுக்குப் பொருள் கூறாமல் இதன் பொருள் வெளிப்படை என்று எழுதுவர் (சூத்திரம், 60, 61, 68).

இந்நூலின் காப்புச் செய்யுளாகிய 'ஆனைமுக னாறுமுகன்' என்பது இந்த நூல் நிலையத்தில் உள்ள அடங்கன் முறை, ஒழிவிலொடுக்கம், உடலறி விளக்கம் இவற்றின் ஏட்டுச் சுவடிகளில் காணப்படுகின்றது.

இந்நூலாலும் உரையாலும் தெரியவரும் சில அரிய செய்திகள் : தம்முள் யாவர் பெரியவரென்று தெரியாது வாதம் புரிந்து வந்த தும்புரு, நாரதர்முன் அநுமன் மலையுருகும்வண்ணம் குண்டகக்கிரியாவென்னும் ஒரு ராகம் பாடி அவர்களைக் கருவ மடக்கினார் (பக்கம், 39); வீரவல்லபாசாரியர் என்பவர் சிவபெருமானால் பரதமுனி என்ற சிறப்புத் திருநாமம் பெற்றார் (பக்கம், 48); சரிகமபதநி என்று ஏழு சுரம் எடுத்து வெளியாக்கியவன் இராவணன் (பக்கம், 44); சிவபெருமான் ஐவகைச் சக்திகள் நிமித்தம் நடனம் முதல் ஐந்தையும் ஆடினார் (பக்கம், 28); தேவியார் ஆடலாசிரியராக இருந்து தாளங்கொட்டப் பரமசிவன் நிருத்தஞ் செய்தார் (பக்கம், 13); விநாயகருக்கு நிருத்த கணபதி என்ற பெயர் சிவபெருமானால் அளிக்கப் பெற்றது.

இந் நூலில் குறிப்புரை என்ற தலைப்பின் கீழே புதியனவாகச் சில செய்திகள் சேர்க்கப் பெற்றுள்ளன. இவற்றை

எழுதுவதற்குத் துணையாக இருந்த நூல்கள் அபிநயதர்ப் பணம் ,இசைமரபு, சச்சபுடவெண்பா, சுத்தானந்தப்பிரகாசம், தாளசமுத்திரம், பாவராக தாளம், மகாபரத சூடாமணி என்பனவாகும்.

ஐயரவர்கள் பெயரால் அடையாற்றில் ஒரு நூல் நிலையம் அமைவதற்கு முக்கிய காரணமாக இருந்தது இந்நூலே யாதலால் இந் நூல் நிலையத்தின் முதல் வெளியீடாக இது வருகின்றது.

இனி, இந் நூலைத் தொடர்ந்து இதுகாறும் வெளி வராத இசை நாடக நூல்கள் பலவற்றை ஒன்றன்பின் ஒன்றாக வெளியிட உத்தேசம் உள்ளது. இந்த எண்ணத்தை இறைவன் கூட்டுவிப்பானாக.

பழங்காலத்தில் அரசர்களாலும் ஆலயபரிபாலகர் களாலும் ஆதரவுபெற்று ஓங்கியிருந்து பிற்காலத்தில் ஆதரிப்பார் இல்லாமையால் வரவரக் குன்றி வந்த நாட்டியக் கலையை உயிர்ப்பித்து அதனை விருத்திசெய்யக் கலாக்ஷேத்திரம் என்னும் ஒரு ஸ்தாபனத்தை அடையாற்றில் நிறுவி, நாட்டியக் கலையை வளர்த்து அதன் விருத்திக்காக மிகவும் உழைத்து வரும் அதன் அதிபர் ஸ்ரீமதி ருக்மிணிதேவி யாரவர்கள் இந்நூலுக்கு ஒரு முன்னுரை எழுதியும் இதனை வெளியிடுவதற்கான செலவுகளைக் கலாக்ஷேத்திரத்தில் ஏற்றுக்கொண்டும் உதவியதற்கு நான் அவர்கள்பால் பெரிதும் கடமைப்பட்டவனாக உள்ளேன்.

என் தந்தையாரவர்கள் செய்து வந்த நூலாராய்ச்சி யிலும், நூற்பதிப்பிலும் சில வருஷங்கள் உடனிருந்து உதவிசெய்து பழகிய அன்பரும், அடையாறு B. T. உயர் தரக் கலாசாலைத் தமிழாசிரியருமான வித்வான் ஸ்ரீ ச. கு. கணபதி ஐயர், B.O.L., அவர்கள் இந்நூலுக்குக் குறிப்புரை

எழுதுவதிலும், நூல் அச்சாகி வருகையில் ஒப்பு நோக்கு வதிலும் மிக்க உதவி செய்தார்கள். அவர்களுக்கும், வட மொழிச் சொற்கள் சிலவற்றின் சரியான உருவத்தை அமைத்துக் கொள்வதற்கு உதவிய அடையாறு புத்தக சாலையைச் சேர்ந்த பண்டிதர் ஸ்ரீ K. இராமச்சந்திர சர்மா அவர்களுக்கும் எல்லா நன்மைகளும் உண்டாகும்படி செய்வித்தருளும்வண்ணம் சிற்றம்பலநாதரை இறைஞ்சு கின்றேன்.

மகாமகோபாத்தியாய
டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல்நிலையம், அடையாறு
29-2-1944

இங்ஙனம்
S. கலியாணசுந்தரையர்

உ

# பரத சேனாபதீயம்

## பொதுப் பாயிரம்

### தெய்வ வணக்கம்

**ஆனைமுக னாறுமுக னம்பிகைபொன் னம்பலவன்**
**ஞானகுரு வாணிலையுள் நாடு.** 1

*யாதானுமொரு நூல் உரைக்குமிடத்து நூலின் தன்மை' நுவல்வோன் தன்மை, நுவலும் தன்மை, கொள்வோன் தன்மை, கோடற்றன்மை ஆகிய ஐந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பாயிரம் உரைத்து உரைக்கற்பாற்று என்று ஆன்றோர் நியமித்திருப்பதால், ஈண்டுப் பொதுப்பாயிரம் உணர்த்துதல் நுதலிற்று. அற்றேல், இத்தலைச் சூத்திரம் என் நுதலிற்றோவெனின், தான் எடுத்துக்கொண்ட நூல் இடையூறின்றி இனிது முடிதற்பொருட்டு வழிபடுங் கடவுள் வணக்கமாகிய மங்கலம் உணர்த்தல் நுதலிற்று.*

### குறிப்புரை

*நுவல்வோன் - ஆசிரியன். கொள்வோன் - மாணாக்கன். கோடல் தன்மை - பாடங்கேட்கும் முறை. பாயிரம் என்பது வரலாறு. பதினொரு சிறப்பாவன : (1) ஆக்கியோன் பெயர், (2) நூல் வந்த வழி, (3) நூல் வழங்கும் இடம், (4) நூலின் பெயர், (5) இன்ன பாவால் ஆனாது நூல் அல்லது இன்ன நூல் கேட்டபின் இதனைக்கேட்க என்பது, (6) இந்நூலில் சொல்லப்பட்ட பொருள் இன்னதென்பது, (7) இதனைக் கேட்டற்குரியோர் இவர் என்பது, (8) இந்நூற்பயன் இன்ன*

தென்பது, (9) நூல் இயற்றப்பட்ட காலம், (10) அரங்கேற்றப்பட்ட இடம், (11) நூல் இயற்றப்பெற்ற காரணம் ஆகிய இவையாம்.

இப்பொழுது கிடைத்துள்ள பிரிவாகிய பொதுப் பாயிரத்துள் நூலின் தன்மையும், நுவல்வோன் தன்மையின் ஒரு பகுதியுமே பதிப்பிக்கப் பெற்றுள்ளன. (1)

## 1. நூலின் தன்மை[1]

### பன்னிரு தாண்டவங்கள்—தாண்டவ பதி

**திருவள ருலகிற் சீவகோ டிகளின்**
**உரைமன முணரா தொளிரு மாதி**
**தன்னா னந்தஞ் சந்தியை கவுரி**
**திரிபுரங் காளி சீர்முனி யழித்தல்**
**உக்கிரம் பூத முயர்பிர ளயமே**
**புசங்கஞ் சுத்தம் புகலீ ரஈறின்**
**பகுதிசால் விளக்கும் பதமலர் தொழுவாம். 2**

(இதன் பொருள்) இலக்குமி வசிக்கின்ற உலகத்திற் சீவகோடிகளின் வாக்கு, மனம், காயம் இவைகளுக்கு அகோசரமாய் விளங்கும் மூலப்பொருள் தாண்டவம் நூற்றெட்டின்[2] உய்த்துணர்ந்தெடுத்த ஆனந்த தாண்டவம், சந்தியா தாண்டவம், கௌரி தாண்டவம், திரிபுர தாண்டவம், காளி தாண்டவம், முனி தாண்டவம், சங்கார தாண்டவம், உக்கிர தாண்டவம், பூததாண்டவம், பிரளய தாண்டவம், புஜங்க

---

1. பொதுப் பாயிரத்தின் ஐந்து உறுப்புக்களுள் நூலின் தன்மை 2 முதல் 62 வரையில் உள்ள சூத்திரங்களில் விவரிக்கப் பெறுகின்றது.

2. நூற்றெட்டென்பது 22-ஆம் சூத்திரத்தாலும் பெறப்படும்.

தாண்டவம், சுத்த தாண்டவம் ஆகிய பன்னிரண்டு தாண்டவப் பகுதிகளை மிக விளக்க நடித்தருளும் பதமலரை (நிதம்) துதிப்பாம் (என்றவாறு).

(பதசாரம்.) வாக்கு, மனம் என்றமையால் காயம் வருவிக்கப்பட்டது.

(1) பதசாரஷடங்கம், சருவலோகம், தேவர்கள், தாளப் பிரமாணம் முதலியவெல்லாம் நாமேயாவோமென்னும் ஈக்ஷணா விருத்தியால் ஆனந்த ரூபமாகப் பவித்துச் சதி நாட்டியம், பேரணி நாட்டியம் என்னும் இருவகையாக நடிக்கும் பாண்டரங்கக் கூத்தை ஆனந்த தாண்டவம் (இஃது. உலகோற்பத்தி நிமித்தமாம்) எனவும்,

(2) சுரராகாதி வாத்தியத் தொனி முதலியவெல்லாம் நாமே யாவோமென்ற ஈக்ஷணா விருத்தியால் பவித்துக் கர நாட்டியம், பேரணி நாட்டியம் என்னும் இருவகையாக நடிக்கும் அல்லியக் கூத்தைச் சந்தியா தாண்டவம் (இது தேவர்கள் நிமித்தமாம்) எனவும்,

(3) ஆங்கிகாதியபிநயம், அவயவபேதம், நவரசம் முதலியவெல்லாம் நாமேயாவோமென்ற ஈக்ஷணா விருத்தியால் பவித்துச் சிங்கார நாட்டியம்,முகசாளைய நாட்டியம் என்னும் இருவகையாக நடிக்கும் குடக் கூத்தைக் கௌரிதாண்டவம் (இது வேதம் வெளியாகும் நிமித்தமாம்) எனவும்,

(4) சந்நியாசாதி ஆச்சிரமம், விருது, புராணம் முதலியவெல்லாம் நாமேயாவோமென்ற ஈக்ஷணா விருத்தியால் பவித்து ஸ்தம்ப நாட்டியம், அசுர நாட்டியம் என்னும் இருவகையாக நடிக்கும் கொடிக் கூத்தைத் திரிபுரதாண்டவம் (இஃது. அசுரர் நிமித்தமாம்) எனவும்.

(5) தண்டம், உத்தாங்கதண்டம், பிரம்பு முதலிய வற்றின் இலக்கணங்கள், சிற்பம், உப சாஸ்திரம் முதலிய வெல்லாம் நாமேயாவோமென்ற ஈக்ஷணா விருத்தியால் பவித்துக் குண்டல நாட்டியம், சித்திர நாட்டியம் என்னும் இரு வகையாக நடிக்கும் கபாலம் அல்லது மரக்காற் கூத்தைக் காளிதாண்டவம் (இது, குண்டல நிமித்தமாம்) எனவும்,

(6) சகல தொழில், வித்தியாதான லக்ஷணம் முதலிய வெல்லாம் நாமேயாவோமென்ற ஈக்ஷணா விருத்தியால் பவித்து யோக நாட்டியம், இலய நாட்டியம் என்னும் இரு வகையாக நடிக்கும் மல்லுக் கூத்தை முனி தாண்டவம் (இது, வியாக்ரபாதர் நிமித்தமாம்) எனவும்,

(7) தாவரசங்கமாதிகள், விவாக லக்ஷணம் முதலிய வெல்லாம் நாமேயாவோமென்னும் ஈக்ஷணா விருத்தியால் பவித்துச் சிங்கள நாட்டியம், கிஞ்சுரர் நாட்டியம் என்னும் இருவகையாக நடிக்கும் பாவைக் கூத்தைச் சங்காரதாண்டவம் (இது, காலசங்கார நிமித்தமாம்) எனவும்,

(8) இரத்தினப் பரீக்ஷை, அசுவப் பரீக்ஷை, கஜப் பரீக்ஷை, செப்பிடு வித்தை, கண்கட்டு வித்தை முதலிய சகல சக்திகளும் நாமேயாவோமென்னும் ஈக்ஷணா விருத்தியால் பவித்து இராஜ நாட்டியம், கருடி நாட்டியம் என்னும் இருவகையாக நடிக்கும் கடையக் கூத்தை உக்கிர தாண்டவம், (கருடி நாட்டியம் என்பது சிலம்ப நாட்டியம்; இது, யானை யுரித்தல் நிமித்தமாம்) எனவும்,

(9) உருத்திரகணிகை, உருத்திரகணிகையின் சந்ததி, மந்திர சாஸ்திரம், கழைக் கூத்து முதலியவெல்லாம் நாமே யாவோமென்னும் ஈக்ஷணா விருத்தியால் பவித்து மகாசபல நாட்டியம், பட்டஜ நாட்டியம் என்னும் இருவகையாக நடிக்

கும் குடைக் கூத்தைப் பூத தாண்டவம் (பட்டஜும்—சத்தி தரித்தாடுதல்; இது, தாருகாவன நிமித்தமாம்) எனவும்,

(10) கங்காநதி, சமுத்திரம், அஷ்டகுலாசலம், உத்தர கிரியை, சுகர்மகிரியை முதலியவெல்லாம் நாமேயாவோமென்ற ஈக்ஷணா விருத்தியால் பவித்துப் பாவாபாவ நாட்டியம், ஆகாச சாரி நாட்டியம் என்னும் இருவகையாக நடிக்கும் துடிக் கூத்தைப் பிரளய தாண்டவம் (இது, நிச்சபத நிமித்தமாம்) எனவும்,

(11) ஆபரணாதிகள், போசனபரிபாகம், மதனன் நாடகாதி முதலியவெல்லாம் நாமேயாவோமென்ற ஈக்ஷணா விருத்தியால் பவித்துத் தாளாங்க நாட்டியம், பூசாரி நாட்டியம் என்னும் இருவகையாக நடிக்கும் வெறிக் கூத்தைப் புஜங்க தாண்டவம் (இது, சர்ப்ப நிமித்தமாம்) எனவும்,

(12) உலக சஞ்சாரம், சரியையாதிகள், மகாரிஷிகள் முதலியவெல்லாம் நாமேயாவொமென்னும் ஈக்ஷணா விருத்தியால் பவித்துப் பாதசாரி நாட்டியம், தேசசாரி நாட்டியம் என்னும் இருவகையாக நடிக்கும் வெறிக்கூத்தைச் சுத்த தாண்டவம் (இஃது, உலக சஞ்சார நிமித்தமாம்) எனவும் கூறினார்.

இதில் [1]தாண்டவம் 12ம், நாட்டியம் 24ம், உற்பவம் 32ம், கூத்து 13ம் வந்தவாறு காண்க.

இத் தாண்டவம் பன்னிரண்டில், கௌரி தாண்டவத்திற் பாவத்திலிருந்து பகரமும், சந்தியா தாண்டவத்தில் ராகத்திலிருந்து ரகரமும், ஆனந்த தாண்டவத்தில் தாளத்திலிருந்து தகரமும், ம் என்ற சுத்தியும் சேர்த்துப் பரதம் என்றபெயர் உண்டாயிற்று.

---

1 விவரங்களை 6, 7 ஆம் பக்கங்களிற் பார்க்க.

| எண் | தாண்டவம் 12 | நாட்டியம் 24 | உற்பவம் 12 | கூத்து 13 | நிமித்தம் 12 |
|---|---|---|---|---|---|
| 1. | ஆனந்த தாண்டவம் | சதி நாட்டியம் பேரணி நாட்டியம் | பதசாரஷ்டங்கம் சருவ லோகம் தேவர்கள் தாளப்பிரமாணம் 4 | பாண்டரங்கக் கூத்து | உலகோற் பத்தி நிமித்தம் |
| 2. | சந்தியா தாண்டவம் | கர நாட்டியம் பேரணி நாட்டியம் | ராகாதி வாத்தியத் தொனி 1 | அல்லியக் கூத்து | தேவர்கள் நிமித்தம் |
| 3. | கௌரீ தாண்டவம் | சிங்கார நாட்டியம் முகசாளை நாட்டியம் | அபிநயம் அவயவ பேதம் நவரசம் 3 | குடக்கூத்து | வேதம் வெளியாகும் நிமித்தம் |
| 4. | திரிபுர தாண்டவம் | ஸ்தம்ப நாட்டியம் அசுர நாட்டியம் | ஆச்சிரமம் விருது புராணம் 3 | கொடிக்கூத்து | அசுரர் நிமித்தம் |
| 5. | காளீ தாண்டவம் | குண்டல நாட்டியம் சித்திர நாட்டியம் | தண்டம் முதலிய வற்றின் இலக் கணங்கள் சிற்பம் உப சாஸ்திரம் 3 | கபாலக்கூத்து (அல்லது) மரக்காற் கூத்து | குண்டல நிமித்தம் |
| 6 | முனி தாண்டவம் | யோக நாட்டியம் லய நாட்டியம் | சகல தொழில் வித்யாதான லட்சணம் 3 | மல்லுக் கூத்து | பதஞ்சலி வியாக்கிரபாதர் நிமித்தம் |

| | | | | |
|---|---|---|---|---|
| 7. சங்கார தாண்டவம் | சிங்கள நாட்டியம் கிஞ்சுரர் நாட்டியம் | தாவர சங்கமாதிகள் விவாகலட்சணம் 2 | பாவைக் கூத்து | காலசங்கார நிமித்தம் |
| 8. உக்கிர தாண்டவம் | இராஜ நாட்டியம் கருடி நாட்டியம் | சகல சக்திகள் 1 | கடையக் கூத்து | யானை உரித்தல் நிமித்தம் |
| 9. பூத தாண்டவம் | மகாசபல நாட்டியம் பட்டஜ நாட்டியம் | உருத்திர கணிகை சந்ததி மந்திர சாஸ்திரம் தழைக்கூத்து 3 | குடைக் கூத்து | தாருகாவன நிமித்தம் |
| 10. பிரளய தாண்டவம் | பரவாபாவ நாட்டியம் ஆகாசசாரிநாட்டியம் | நதி சமுத்திரம் அஷ்ட குலாசலம் கிரியைகள் 3 | துடிக் கூத்து | நிச்சபத நிமித்தம் |
| 11. *புஜங்க தாண்டவம் | தாளரங்க நாட்டியம் பூசாரி நாட்டியம் | ஆபரணாதி போஜன பரிபாகம் நாடகாதி 3 | வெறிக் கூத்து | சர்ப்ப நிமித்தம் |
| 12. *சுத்த தாண்டவம் | பாதசாரி நாட்டியம் தேசசாரி நாட்டியம் | உலக சஞ்சாரம் சரியை யாதிகள் மகரிஷிகள் 3 | வெறிக் கூத்து | உலக சஞ்சார நிமித்தம் |
| 12 | 24 | 32 | 13 | 12 |

*கிடைத்துள்ள இரண்டு பிரதிகளிலும் புஜங்க தாண்டவமும், சுத்த தாண்டவமும், வெறிக் கூத்தென்றே எழுதப் பெற்றுள்ளன. பேதம் புலப்படவில்லை.

நினைத்தது பாவம்; நினைத்தசைத்தது அபிநயமாம்[1] இது பிரமத்தினிடத்திற் சுத்த சத்துவத்தால் உண்டான நாதப்பிரமமாம். இது வருணாத்மகம் நாதாத்மகத்தோடு கூடியிருக்கும். வேதவேதாதி அக்ஷரங்கள் வருணாத்மகமாம்; மூலாதாரத்தினின்றும் பிராணன் கிளம்பிப் பிரமரந்தரத்தில் முட்டி உரம், கண்டம், தந்தம், ஓஷ்டம் முதலிய சம்பந்தத்தால் தோன்றும் நாதமும் வீணா' வேணு முதலியவற்றில் தோன்றும் நாதமும் நாதாத்மகமாம். இவ்விரண்டுங்கூடி அகாராதி அக்ஷரமாய்ப் பரதமென்னும் பதமாயிற்று.

## குறிப்புரை

அகோசரமாய்-காணப்படாமல். ஆதி என்றது மூலப் பொருளாகிய சிவபெருமானை. தாண்டவங்களுக்குப் பத மலர் விசேடமாக நிற்பதாலும், 'பாதமே மோக்ஷத்துக்கிருப் பிடம்' என்ற கொள்கையாலும், 'பதமலர் தொழுவாம்' என்றார். ஈக்ஷணா விருத்தி - கண்களின் தொழில் பவித்து -தோன்றி. சுர ராகாதி-சுரம்ராகம் முதலியன. நவரசமாவன: வீரம், பயம், இழிப்பு, அற்புதம், இன்பம், அவலம், நகை, நடுவு நிலை, உருத்திரம் என்பனவாம். சங்காரம் = சம்ஹாரம்; அழித்தல். காலன் -யமன். சிங்கள நாட்டியத்தின் விவ ரத்தை 46-ஆஞ் சூத்திரத்தின் குறிப்புரையிற் காண்க. கழைக்கூத்து - மூங்கிலின்மேல் ஆடுதல்; கழை - மூங்கில். கலம்பகம் என்ற நூலில் ஒரு பெண் கத்தி தரித்து ஆடுதல் மதங்கியார் என்ற உறுப்பின் பாற்படும். அது வேறு. பட்டஜ நாட்டியம் வேறு; இதன் இலக்கணத்தை 46-ஆஞ் சூத்திரத்தின் குறிப்புரையிற் காண்க சரியை யாதிகள் - சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன. சுத்தி - தூய்மை.

---

1. சூத்திரம் 25.

சிலப்பதிகார உரையாசிரியர் கூத்துவகைகளைக் கடையம், மரக்கால், குடை, துடி, அல்லியம், மல், குடம், பேடு, பாவை, பாண்டரங்கம், கொடுகொட்டி என்று பதினொன்றாகக் கூறுவார் (அரங்கேற்று காதை 14.) மகாபரத சூடாமணியார் பதின்மூன்று என்பர்.

உரம் - மார்பு. கண்டம் - கழுத்து. ஒஷ்டம் - இதழ் (உதடு). வீணா - வீணை, வேணு - புல்லாங் குழல்,

## கட்டளைக் கலித்துறை

பரதமெ னும்பெயர் மூன்றெழுத் தாகும் பகருமதன்
சாரநல் லோர்பக ரோசை புரவியச் சம்மிரதம்
சூரதவன் பாலை நிலங்கதிர் தெய்வஞ்சொல் சாதி மன்னன்
உரைதரு பாலன் பருவமு நாளுத் தரமுடனே. 3

உத்தம ராசிவண் கன்னியு முண்டி யுயரமிழ்தம்
வித்தக நற்கதி விண்ணவ ராமித னர்த்தமெல்லாம்
இத்தகை யாமலை மங்கைக்கு மேற்ப வெடுத்துரைத்தான்
அத்தன்பொன் னம்பலத் தாடிய நாடக வாகமமே. 4

நிறுத்த முறையானே பரதமென்னும் பொருளைப் பார்வதிக்கு உபதேசிக்கிறார்.

(இ-ள்.) பரதமென்னும் பெயர் மூன்றெழுத்தாம்; அவற்றுள் பகரத்திற்கு ஓசை - குதிரை; இரசம் - அச்சம்; நிலம் - பாலை; தெய்வம் - சூரியன்; சாதி - மன்னன்; பருவம் - பாலன்; நாள் - உத்தரம்; இராசி - கன்னி; உண்டி - அமிழ்தம்; கதி - விண்ணவர் ஆகப் பத்தையும் பார்வதிக்கு

*அத்தன் தான் பொன்னம்பலத்தில் நடித்த நாடகத்து ஆகமப் பொருளை எடுத்துரைத்தான் (எ-று)* (3-4)

## ரகாம்

**ஆகம மேவும் ரகர நடுவெழுத் தாகுமிசை**
**கோகில மாகு மிரதமுஞ் சாந்தங் குலவுநிலம்**
**மோக மருதமுந் தெய்வமு மிந்திரன் மொய்த்தகுலத்**
**தோகை யரச னவிட்ட மகரமுஞ் சொல்லினனே.** 5

**சொல்லும் பருவமும் பாலனும் பாலனந் தொல்கதியும்**
**புல்லு மிருக மெனுமுறை யோடு பொருந்தவெடுத்**
**தல்லுந் தருவு மறலு நெறிபுன லார்முகிலும்**
**வெல்லுங் கருங்குழ லாட்குமுக் கண்ணன் விளம்பினனே.** 6

*(இ-ள்.) நடுவெழுத்தாகிய ரகரத்திற்கு ஓசை - குயில்; இரசம் - சாந்தம்; நிலம் - மருதம்; தெய்வம் - இந்திரன்; குலம் - மன்னன்; நாள் - அவிட்டம்; இராசி - மகரம்; பருவம் - பாலன்; உண்டி - பாலன்னம்; கதி - மிருகம் என்னும் இப்பத்தையும் இருள் முதலியவற்றை வெல்லும் கரிய கூந்தலையுடையாட்குத் திரிநேத்திர தாரியாகிய சிவபெருமான் அருளினன் (எ-று.)*

## குறிப்புரை

*அல் - இருள்; தரு - கூந்தற்பனை என்ற மரம்; அறல் - கருமணல்; நெறிபுனல் - நீரலை; முகில் - கார்மேகம்; இவை கூந்தலுக்கு உவமை,* (5-6)

## தகரம்

வேதிய ரோதுந் தகர விறுதியின் மேலெழுத்திற்
கோதிய வோசையு மன்ன மிரதமும் வீரமென்னத்
தீதி னிலங்குறிஞ் சித்தெய்வ மேகுகன் சாதிமன்னன்
ஏதில் பருவம் புருடனு மாமென் றிசைத்தனனே. 7

சாற்றிய நாளது சோதியும் ராசியும் தயங்குதுலாம்
தோற்றிய வுண்டி யமுதங் கதிசொல் விண்ணவராம்
போற்று மிமயப் பொருப்பி லுலவும் பொலமயிலுக்
கேற்றி நல்லுணர் வத்தனு மின்ன தியம்பினனே. 8

*(இ-ள்.) மறையவராற் சொல்லப்பட்ட இறுதி எழுத்தாகிய தகரத்திற்கு ஓசை - அன்னம்; இரசம் - வீரம்; நிலம் - குறிஞ்சி; தெய்வம் - கந்தன்; சாதி - மன்னன்; பருவம் - குமரன்; நாள் - சோதி; இராசி - துலை; உண்டி - அமிழ்தம்; கதி - விண்ணவர்; ஆக இப்பத்தையும் இமய மலையிற் சஞ்சரிக்கும் மயில் போல்வாளுக்கு இன்பந்தரத்தக்க ஞானோபதேசம் செய்தருளிய அத்தன் இவ்வண்ணம் சொல்லியருளினன் (எ-று.)*

## குறிப்புரை

*துலை - தராசு; துலாம். பொலம் மயில் - பொன் மயில் போன்ற உமாதேவியார். 7ஆம் சூத்திரத்தில் தளை நோக்கிக் குறிஞ்சித்தெய்வமென்று இரட்டித்தது.* (7-8)

## மகரம்

இயம்பும் பிரணவத் தீறா யிதற்கு மியைமகரம்
நயந்தரு மோசை கிரவுஞ்ச மேரச மின்சிரிப்பாம்
பயங்கெழு முல்லை நிலங்கோ பகவனும் பால்வசியன்
சயந்தரு நல்ல பருவமு மன்னவன் றான்றெரியே. 9

தெரிகின்ற நாண்மக மாகுமி ராசியுஞ் சிங்கமதாம்
பருகின்ற வுண்டிசித் ரான்னம தாகும் பகர்கதிமேல்
விரிகின்ற தோகை யுறுமயி லாகு மிடைநுடங்கக்
கிரியை யிகழ்ந்தெழு மென்முலை யாட்கிவை கேண்மி
[னென்றே. 10

(இ-ள்.) ஐயோநின்ற பிரணவத்தின் இறுதியே இதற்கும் ஈற்றெழுத்தாய்ப் பொருந்துகின்ற மகர மெய்க்கு ஓசை - கிரவுஞ்ச பக்ஷி; இரசம் - நகை; நிலம் - முல்லை; தெய்வம் - நெடுமால்; சாதி - வைசியன்; பருவம் - மன்னன்; நாள் - மகம்; ராசி - சிங்கம்; உண்டி - சித்திரான்னம்; கதி - மயூரம்; ஆக இப்பத்தும் இடை துவளுமாறு மலையைப் பழித்தெழுகின்ற மென் முலையாளாகிய உமையவட்குச் சிவபெருமான் அருளிச் செய்தனன் (எ-று.)

இவ்வெட்டுக்கவியும் ஒரு தொடர்.

(ப-ம்.) 'மலை மங்கைக்கும்' என்ற எச்சவும்மையான் ஆதியில் பராபரமாகிய பரமேசுவரன், விஷ்ணு, பிரமன், நந்திகேசுவரன், நாரதன், பரதமுனி, சாரங்கமுனி முதலியோருக்கு முதனூலாகிய பரதநூலை யருளிச்செய்தனன்; இதனைப் பெற்றுக் கயிலாயத்திற் சிவபெருமான் சந்நிதானத்தில் தனித்தனி நடித்து அபிநயித்து ஆடிக்காட்டினர். இவற்றை அங்கீகரித்தும், மென்மையான சரீரமும் அமரிய குரலும், அன்ன நடையும், உளதோ இலதோ வென்னும் இடையும் தாங்கிய பெண்பால்களுக்கு உபதேசித்துப் பாரித்தல் வேண்டுமெனும் கருத்தால் பார்வதி தேவியாருக்கு அனுக்கிரகித்தாரென்பது பெறப்பட்டது.

'மலைமங்கைக்குமேற்ப': ஏற்ப என்றதனால், 'எச்சக்திகளிலும் மிக்க சக்தியுற்ற இமயமயிலுக்கு நவரசங்களும்

பாவ ராக தாளங்களும், சுதி லயங்களும் விளங்கி என்றது பெறப்பட்டது.

'மலைமங்கைக்கும்' என்ற உம்மையை உயர்வு சிறப்பும் மையாக்கப் பெண்ணிலக்கணமெல்லாம் ஒருங்கமைந்த அம்மாதா பாவ, ராக, தாள முதலிய யாவும் அப்பரம் பொருள் சந்நிதானத்திலிருக்கும் அரி பிரமாதி தேவர்களெல் லாரும் நாணி நிற்ப நிர்த்தித்துக் காட்டினாளென்பது பெற்றாம்.

சாந்தோக்கிய உபநிஷத்தில் தேவியார் ஆடலாசிரியனா யிருந்து தாளந்தட்டப் பரமசிவன் நிருத்தஞ் செய்தாரென்று கூறியிருத்தல் காண்க.

## குறிப்புரை

பால் - சாதி. வசியன் - வைசியன். சாந்தோக்யோப நிஷத்தில் கூறப்பட்டது என்ற விஷயம் ஆராய்ச்சிக்குரியது.

> ''ஓங்குபுக ழீச னுயர்விதமாய்க் கொண்டாடப்
> பாங்கினிசை நாரதனார் பாடுதலும் பூங்குழலாள்
> பாணி யியற்றினா ளென்றான் பனிவரையில்
> வீணை இயற்றிய வேந்து";

''வரிவிழி உமையாள் தாளம் பிடிக்க மன்றினுளாடிய...."
(சுந்தானந்தப் பிரகாசம், 270, 307.) (9-10)

## பாவ ராக தாளங்களின் பாகுபாடுகள்

மானசம் பாவம் வாசிக மிராகம்
காயிகந் தாளம் கழறுவ தன்றியும்
காரணம் பாவம் சூக்கும மிராகம்
தூலந் தாளம் தோன்றுவ தன்றியும்

நிஷ்களம் பாவம் நிரவலி ராகம்
சகளந் தாளம் சாற்றுவ தன்றியும்
இச்சை பாவ மிராக மறிவாம்
கிரியை தாளங் கிளத்துவ தன்றியும்
சிறப்புப் பாவஞ் சேர்க்கை யிராகம்
பொதுவே தாளம் புகலுவ தன்றியும்
நிருத்தம் பாவங் கீத மிராகம்
வாத்தியந் தாளம் வகைவகை விளங்கும். 11

*(இ-ள்). பாவ ராக தாளங்களைப் பலர் கூறும் விதம் கூறுகின்றார்.*

பாவம் - மானசம்; இராகம் - வாசிகம்; தாளம் - காயிக மாம்; இன்னும், பாவம் - காரணம்; இராகம் - சூக்ஷமம்; தாளம் - தூலமாம்; இன்னும், பாவம் - நிட்களம்; இராகம் - சகள நிட்களம்; தாளம் - சகளமாம்; இன்னும், பாவம் - இச்சை; இராகம் - ஞானம்; தாளம் - கிரியையாம்; இன்னும் பாவம் - சிறப்பு; இராகம் - பொதுச்சிறப்பு; தாளம் - பொது வாம்; இன்னும், பாவம் - நிருத்தம்; இராகம் - கீதம்; தாளம் - வாத்தியமாம். இங்ஙனம் பலவாகக் கொள்வர் பரத நூலாசிரியர் (எ-று.)

## குறிப்புரை

மானசம் - நினைக்கப்படுவது. வாசிகம் - சொல்லப்படுவது. காயிகம் - உடலால் செய்யப்படுவது. சூக்குமம் - சூட்சுமம். கழறுவது - கூறுவது; கிளத்துவதும் அது. (11)

## இலயம் போகம் அதிகாரங்கள்

பாவ மூன்றும் பாக்கு முறையே
மேவு மிலய போகவதி காரம்
என்னுங் காரண மெனப்பன் னும்மே. 12

நிறுத்த முறையானே, இலயம் போகம், அதிகாரங்களைக் கூறுகின்றார்.

(இ-ள்). பாவ, ராக, தாளம் என்ற இம்மூன்றும் பார்க்கும் முறையே இலயம், போகம், அதிகாரம் என்னும் காரணத்துவ அவசரங்களாகச் சொல்லப்படும் (எ-று).

## குறிப்புரை

காரணத்துவ - காரணத்தையுடைய. அவசரம் - சமயம். (12)

## சக்தர்

**இலயத்தி லுன்னு மிவனே சக்தன்.** 13

நிறுத்தமுறையானே, இது முதல் மூன்று சூத்திரங்களால் சக்தர், உத்யுக்தர், பிரவிர்த்தர் ஆகிய மூவரையும் கூறுகின்றார்.

(இ-ள்.) இலயமாகிய பாவாவசரத்திற் சங்கற்பித்து நின்ற சிவனே சக்தன் என்று சொல்லப்படுவான் (எ-று). (13)

## உத்யுக்தர்

**சொல்போ கத்திற் சுகிப்பித் தவனே**
**வில்லுத் தியுக்த னெனவி ளம்பும்.** 14

(இ-ள்). போகமாகிய ராகாவசரத்திற் சக்தியை ரஞ்சிப்பித்து நின்ற சிவனே உத்யுக்தன் என்று சொல்லப்படுவான். (எ-று). (14)

## பிரவிர்த்தர்

**அறையதி கார வவதரத் திற்றான்**
**உறைதரு தத்துவ முற்றுச் சத்தியோ**
**டொத்து முயன்றவன் ஓதும் பிரவிர்த்தன். 15**

*(இ-ள்). அதிகாரமாகிய தாளாவசரத்தில் தானும் கருத்திருத்து, பாவத்தை எய்திச் சக்தியோடொத்து முயன்ற சிவன் பிரவிர்த்தன் என்று சொலப்படுவான். (எ-று)*

*இந்த மூன்று சூத்திரங்களும் ஒரு தொடர். (15)*

## குறிப்புரை

*அவதரம் - அவசரம். கருத்திருத்து - மனத்தில் பதிக்கும்.*

## அபிநயம்

**படர்க்கை யெய்திச் சிவன்சிவை யிருவராற்**
**காரிய மாம்பிர பஞ்சங் களிலே**
**முமுக்ஷுவுக்கு மோக்கசா தனங்கள்**
**விளக்கச் சிவன்பால் நிகழு மோக்ஷ**
**நியாய மகத்துவமே நில்வபி நயமாம். 16**

*நிறுத்த முறையானே, பரதம் என்னும் காரியம் உண்டான விதம் கூறுகின்றார்; இது முதல் ஆறு சூத்திரங் களானே பரதமென்னும் காரியக்குறி கூறுகின்றார்.*

*(இ-ள்). படர்க்கையாய்ச் சிவன் சக்தி இருவராலும் காரியப்பாடெய்தி நின்ற பிரபஞ்சத்திலே மோட்க் விச்சை யுடைய முமுக்ஷுக்களுக்கு மோட்ச சாதனங்களை நியமித்து*

விளக்கச் சிவத்தின்பால் நிகழ்கின்ற மோட்ச சாதன நியாயா மகத்துவமே கரகிருதமாகிய அபிநயமென்று சொல்லப்படும். (எ-று).

## குறிப்புரை

சிவை - உமையவள். முமுக்ஷு - மோட்சத்தில் இச்சையுள்ளவன். கரகிருதம் - கைகளின் தொழில். மோக்கம் - மோட்சம். நிலவு அபிநயம் - நிலைபெற்ற அபிநயம். (16)

## பாதக்கிரமம்

**போகத் தவாவுடைப் புட்க ளுக்குப்**
**போக சாதன நியமித் துணர்த்தச்**
**சத்தி பால்நிகழ் சாதன நியாமகம்**
**பாதக் கிரம மெனப்பன் னும்மே.** **17**

(இ-ள்). போக இச்சையுடைய புட்களுக்குப் போக சாதனங்களை நியமித்து விளக்கவேண்டிச் சத்தியின்பால் நிகழுகின்ற போக சாதன நியாய மகத்துவமே பாதகிருதமாகிய பாதக்கிரமம் என்று சொல்லப்படும். (எ-று).

பாதக்கிரமம் எனினும் அடைவெனினும் பொருந்தும். (17)

## ஐந்தொழில்

**பாவ முன்றோ டபிநயம் பதக்கிரமம்**
**தீதி லைந்து முறையே சிவன்சிவை**
**சதாசிவன் மகேசன் சாற்றுஞ் சுத்தம்**
**ஐந்துதத் துவத்தின் பானிலை பெறூஉம்**
**சிருட்டி திதிசங் காரந் திரோபவம்**
**அனுக்கி ரகமைங் கிருத்திய மமையும்.** **18**

(இ-ள்). ஆதலால் பாவம் முதலான ஐந்தும் தத் தமக்குரிய முறையாற் சிவன், சத்தி, சதாசிவம், மகேசுவரன், சுத்தவித்தை என்னும் ஐந்து தத்துவங்களின்பால் நிலை பெற்றுச் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அனுக் கிரகம் என்னும் ஐந்து கிருத்தியங்களாக முடியும். (எ-று.)

## குறிப்புரை

| பாவம் முதலியன | தத்துவங்கள் | தொழில் |
|---|---|---|
| 1. பாவம் | சிவன் | சிருஷ்டி |
| 2. ராகம் | சத்தி | ஸ்திதி |
| 3. தாளம் | சதாசிவம் | சம்ஹாரம் |
| 4. அபிநயம் | மகேசுவரன் | திரோபவம் |
| 5. பாதக்கிரமம் | சுத்தவித்தை | அனுக்கிரஹம் |

ஸ்திதி - காத்தல். திரோபவம் - மறைத்தல். அனுக கிரகம் - அருளல். பாவம் முதலான ஐந்தும் அங்கம் எனப் படும்; சூ. 20 உரை. (18)

## ஆனந்த தாண்டவம்

**ஆதலி னைந்துங் கூடிய நிலைக்களம்**
**ஆதி சிவத்திற் கைந்தொழி லாகும்**
**ஆனந்த தாண்டவ மறையப் படுமே.** **19**

(இ-ள்.) ஆதலால், பாவம், ராகம், தாளம், அபிநயம், பாதக்கிரமம் என்னும் இவ்வைந்தும் கூடிய நிலைக்களமே பரமசிவத்திற்குச் சிருஷ்டி, ஸ்திதி, சங்காரம், திரோபவம், அனுக்கிரகம் என்னும் இவ்வைந்து கிருத்திய ரூபமாகிய ஆனந்த தாண்டவமென்று சொல்லப்படும் (எ-று.) (19)

திரோபவம்[1] திதியிலு மனுக்கிரக மழிப்பினும்
அடங்க வைந்து மூன்றா குவபோல்
அபிநயம் பாவத் தடிக்கிரமந் தாளத்
தடங்க வைந்து மூன்ற தாகிப்
பரதமெனக் காரணக் குறிநிலை பெற்றன. 20

(இ-ள்.) திரோபவம்[1] ஸ்திதியிலும், அனுக்கிரகம் சங்காரத்திலும் அடங்கக் கிருத்தியமைந்தும் மூன்றாகியவாறு போல, அபிநயம் பாவத்திலும், பாதக்கிரமம் தாளத்திலும் அடங்க, அங்கம் ஐந்தும் மூன்றாகித் தொகை பெற்றுப் பரத மென்னும் காரணக் குறிநிலை பெற்றதென்க (எ-று). (20)

இம்முறை யன்றி வேறா யியம்பினும்
அம்முறை நூன்முறை யாமென வமைக்க. 21

(இ-ள்.) பாவம் முதலிய ஐந்து அங்கங்களுக்கு யாமிங்கே கூறிய முறையன்றிச் சிறிது வேறுபட அபிப்பிராயம் கூறினும், அதனையும் சாஸ்திர பேதமென்று அமைத்துக் கொள்க. (எ-று.) (21)

## ஆனந்த தாண்டவத்தின் தொகையும் விரியும்

ஆனந்த தாண்டவம் பொதுமையி னொன்றாய்த்
தேச காலம் திருஷ்டா தரிசனம்
பேதத் தாற்பிர யோசனத் தாலும்
சிறப்பிற் பத்தோ டிரண்டுநூற் றெட்டாய்
விரியின் வைத்து வேதா கமமுதல்
புராணேதி காசம் பரதமும் புகலும். 22

(பா-ம்.) 1 'திரோபாவம்'.

(இ-ள்.) பரமசிவத்தின்பால் நிகழும் பாவாதி ரூப பஞ்ச கிருத்திய நாம ஆனந்த தாண்டவம் பொதுமையின் ஒன்றாகித் தேசகால பேதத்தாலும், திருஷ்டி தரிசன பேதத்தாலும், பிரயோசனத்தாலும் சிறப்புப்பற்றிப் பன்னிரண்டு, நூற்றெட்டு முதலாகத் தொகை விரியின் வைத்து வேதாகம புராண இதிகாசங்களிலும் பரதசாஸ்திரங்களிலும் விதந்து சொல்லப்படும் (எ-று.) (22)

## பரதம் உபதேசிக்கப்பெற்ற முறை

## முதனூல்

**பரத மூன்றுமுத் தேவன் வடிவமாய்க்**
**கரதலக் கனியெனக் காட்டிய வற்றைத்**
**தெரிக்கு நூலுந் தெளிமறை யந்தமு**
**முதலிய வெல்லா முன்னரி யயனுமை**
**பின்னிந் திரன்முதற் பண்ணவர் தமக்கும்**
**நந்தி முதலிய கணஞ்சா ரங்க**
**தேவர் முதலா முனிக்குஞ் செப்பினன்.** 23

(இ-ள்.) தாண்டவபதியாகிய சிவபெருமான் பாவராக தாளங்களைத் திரிமூர்த்தி சொரூபமென்று விளக்கியவற்றை உணர்த்தும் நூலாகிய என்னாற் சொல்லப்பட்ட முதனூல் பரத சாஸ்திரமும் மற்றை வேத வேதாந்த சாஸ்திரங்களும் முதற்கண் அரிப்பிரமாதி அம்பிகைக்கும், பின்னர் இந்திராதி தேவர்களுக்கும், அப்பால் நந்தி முதலிய கணங்கட்கும் மற்றும் சாரங்க தேவர் முதலிய முனிவர்கட்கும் உபதேசித்தனர் (எ-று.)

## குறிப்புரை

பாவ ராக தாளம் திரிமூர்த்தியின் வடிவமென்பது ''பகரமே பிரமன்; மாயன் பண்மெபன்ப ரகர மாகும்; தகரமே ஈசன்; மவ்வும் சத்தியின் கூற தாகும்'' என்ற மகாபரத சூடா மணியால் (1020) விளங்கும். கரதலக்கனி - உள்ளங்கை நெல்லிக்கனி. பண்ணவர் - தேவர். (2[illegible])

## வழிநூல்

### கௌரீகடகம்

அவருள்,
பார்வதி பாவ ராக தாளப்
பகுப்பெலா மறிய வழிநூ லாற்றி
அவற்றை யரனரங் கத்தி லாடிப்
பாடிக் காட்டப் பரமனு மகிழ்ந்து
நின்னட மெமக்கு நிரம்பவா னந்தம்
ஈந்த திதனை யியற்றுவா ரியம்புவார்
தேர்வார் யாவருஞ் சேர்துன் பிழிந்து
தீர்க்கமாய் வாழச்[1] செப்பின னருளால். 24

நிறுத்தமுறையானே வழிநூல் வருமாறு கூறுகின்றார்

(இ-ள்.) மேற்காட்டிய அம்மாணாக்கருள் கௌரி யம்மையார் பாவ ராக தாளங்களின் பகுதிகளெல்லாம் விளங்கத் தம் பெயராற் கௌரீகடகம் என்னும் வழிநூல் செய்து, அவற்றைச் சிவபெருமான் சந்நிதானத்தில் ஆடிப் பாடி அபிநயித்துக் காட்ட அவரும் மகிழ்ந்து, ''பெண்ணே, நீ ஆடிய நடனம் எனக்கு நிரம்பச் சுகம் அளித்தது; இந் நூலைப் படிப்பவர், நடிப்பவர், தேர்பவர், யாவரும் தங்களை

---

(பா-ம்.) 1 'வாழ்கச்'

யடைந்த துன்பம் நீங்கித் தீர்க்காயுளாய் வாழ்க" என்று கருணையால் ஆஞ்ஞாபித்தார் (எ-று.)

'பரமனும்' என்ற உயர்வு சிறப்பும்மையால் அச் சந்நிதானத்திருந்த மாணாக்கரும் பெறப்பட்டது. (24)

# 1. பாவம்

## அபிநயம்

**பாவப் பகுதி பகருங் காலை**
**அகத்தி னினைத்த ததுவா மிதனை**
**முகத்தாற் கரத்தா லசைத்துமுற் காட்டலஃ**
**தபிநய மென்றிங் கறையப் படுமே. 25**

நிறுத்தமுறையானே, இது முதற் பதினொரு சூத்திரங் களால் பாவம் கூறுகின்றார்.

(இ-ள்.) பாவத்தின் பகுதிகளைச் சொல்லுங்கால் மனத்தில் நினைத்தது பாவமாம்; இதனை முகத்தால், கரத்தால் அசைத்துக் காட்டுவது அபிநயமென்று சொல்லப் படும் (எ-று.)

## குறிப்புரை

சீவகசிந்தாமணி, 672-ஆம் செய்யுளின் உரையில் நச்சினார்க்கினியர், "அபிநயமாவது கதை தழுவாதே பாட்டுக்களின் பொருள் தோன்றக் கைகாட்டி அபிநயிப்பது" என்பர். சிலப்பதிகாரத்தில் அடியார்க்கு நல்லார், "அபிநயக் கூத்தாவது கதைதழுவாது பாட்டினது பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ்செய்யும் பலவகைக் கூத்து" என்பர். (அரங்கேற்று காதை. 12) (25)

## அபிநயவகை

**அபிநயம்,**
**ஆங்கிகம் வாசிகம் ஆகா ரியமே**
**சாத்விக மென்று சதுர்வித மாமே. 26**

(இ-ள்) அபிநயமென்பது : ஆங்கிகம், வாசிகம், ஆகாரியம், சாத்விகமென்று நான்கு வகைத்தாம் (எ-று.)

(ப-ம்.) அங்கத்தினாலும் கைகளினாலும் காட்டும் அபிநயத்தை ஆங்கிகாபிநயம் என்றும், வாக்காற் பாடி அபிநயிப்பதை வாசிகாபிநயம் என்றும், அந்த அந்த நாட்டியத்துக்குத் தக்க வஸ்திராபரணம் தரித்துக் காட்டுவதை ஆகாரியாபிநயம் என்றும், இலயம் பாவம் ராகம் முதலிய கதியுடன் கலந்து அபிநயிப்பதைச் சாத்விகாபிநயம் என்றும் கூறினார். இந்நான்கும் கூடியது பரத நாட்டியமாம்.

## குறிப்புரை

அபிநய வகைகளின் இலக்கணத்தைக் கூறுமிடத்தில் மகாபரதசூடாமணி (31) "சாற்றுமாங் கிகமென்ற சரீரத்தினபிந யங்கள்; ஏற்றிடு வாசி கந்தான் வாக்கபி நயமென் றேற்கும்; தோற்றுமாம் காரியந்தான் அலங்காரம்; சாத்வீகம்சொல், தேற்றமாம் நடன பாவ லயமபி நயமாஞ் சாற்றும்" என்று விளக்குகின்றது. (26)

## ஆங்கிகாபிநயத்தின் உட்பிரிவுகள்

**இவற்றுள்,**
**ஆங்கி கத்தை[1]யறையுங் காலை**
**சூசிகா பாவசா தொந்த லாட்ச ணிகமே. 27**

(இ-ள்.) இங்ஙனம் கூறிய ஆங்கிகாபிநயத்தில் சூசிகம், பாவஜம், தொந்தம், இலாட்சணிகம் என நான்கு வகையுளவாம். (எ-று.)

---

(பா-ம்) 1 'ஆவாகிகத்தை'

(ப-ம்.) தாவர சங்கமங்களில் எவற்றையேனும் கைகளினாற் காட்டி, வாக்கினாற் சொல்வதைச் சூசிகாபிநயம் என்றும், தலையினாலும் கண்களினாலும் காட்டுவதைப் பாவஜாபிநயம் என்றும், சிரசு, நேத்திரம், கரம், பாதங்களினாற் காட்டுவதைத் தொந்தாபிநயம் என்றுங் கூறினார்.

## குறிப்புரை

மகாபரத சூடாமணியில் (35) சூசிகாபிநயம், "சாருமே சூசிகந்தான் தாவர சங்க மத்தில், பேருறு மெவற்றை யேனும் பிசகாமற் கைகால் தன்னால், நேரதாய் அபிந யித்து நிச்சயமாகக் காட்டித், தெரிய வாக்கி னாலே சொல்லிக்காட்டுவதாய்ச் செப்பே" என்று விளக்கப்படுகிறது.

பாவஜாபிநயம் பாவாபிநயம் என்றும் வழங்கப்பெறும்; "பாவாபிநயமே யாகுந் தலைகண்ணாற் பாவங் காட்டும்." (மகாபரத. 36.)

லாட்சணிகாபிநயத்தின் இலக்கணம் 29-ஆம் சூத்திரத்திற் கூறப்பெறும். (27)

## தொந்தாபிநயத்தின் வகைகள்

**இதுவே,**
**ஆவா கிகம்பா விகமனு பாவிகம்**
**எனமூன் றாக வியம்பினர் நூலோர். 28**

(இ-ள்.) இங்ஙனம் கூறிய தொந்தமே ஆவாகிக தொந்தம், பாவிக தொந்தம், அனுபாவிக தொந்தம் என மூன்று வகையாம் (எ-று.)

(ப-ம்.) பாடலாசிரியன் பாடும்போது பாத்திரம் அபிநயங்காட்டுவதை ஆவாகிக தொந்தம் என்றும், நிருத்தகி

தானே பாடிக்கொண்டு அபிநயிப்பதைப் பாவிக தொந்தம் என்றும், பாடலாசிரியன் பாடும்போது நாடகியும் பாடிக் கொண்டு அபிநயிப்பதை அனுபாவிக தொந்தம் என்றுங் கூறினார்.

## குறிப்புரை

ஆவாகிகத்தை மகா பரத சூடாமணி 'ஆவாக்யம்' என்று கூறும். ஆவாகிகம் முதலியவற்றின் இலக்கணங்களாவன :

"சொல்லுமா வாக்கி யத்துத் தொந்தமாம் பாட கந்தான்
வெல்லவே பாடும் போது மெல்லிய ருசித மாகச்
சில்லெனப் புளகங் கொள்ளத் திறமாக நடிப்ப தென்றே
வில்லெனும் புருவ மாதே விண்டனர் நூல்வல் லோரே."

"பாவிக தொந்த மென்னப் படுவது சென்னி யுங்கண்
மேவுமற் றெதனா லேனும் மெல்லியர் பாடிக் கொண்டு
பாவலர் மகிழ வாடும் பயனென ஓதும்."

"அனுபா விகத்தொந் தந்தான் ஆவது பாடு வோனும்
வனிதையுஞ் சேர்ந்து பாடி வளர்சிரங் கண்கை கால்கள்
எனுமங்கங் களினால் நன்றாய் இணங்கவே அபிந யித்தல்."
(28)

## இலாட்சணிகாபிநயம்

தரணிவி லுள்ள சகல பொருளையும்
பெயர்கூ றாமற் பிறரறி யும்வணம்
அபிநயிப் பதேலா க்ஷணிகா பிநயம். 29

(இ-ள்.) பூமியிலுள்ள எல்லா வஸ்துக்களையும் பேர் சொல்லாமற் பிறர் அறியும்படி அபிநயிப்பதே லாக்ஷணிகாபி நயம் எனவும் கூறினார். (29)

## வாசிகாபிநயத்தின் வகைகள்

**வாசிகா பிநயம் வகுக்குங் காலைச்**
**சங்கீதோ பகீதஞ் சுசப்த முபசப்தம்**
**எனநான் காக விசைக்கு மென்ப.** 30

(இ-ள்.) வாசிகாபிநயமாவது சங்கீத வாசிகாபிநயம், உபகீத வாசிகாபிநயம், சுசப்த வாசிகாபிநயம், உபசப்த வாசிகாபிநயம் என நான்காம் (எ-று.)

(ப-ம்.) பாத்திரம் தானே பாடிக்கொண்டு ஆடுவதைச் சங்கீத வாசிகாபிநயம் எனவும், பாடலாசிரியன் பாட பாத்திரம் ஆடுவதை உபகீதவாசிகாபிநயம் எனவும், பாத்திரம் தானே சொற்கட்டு, சதி முதலிய சொல்லிக் கொண்டு ஆடுவதைச் சுசப்த வாசிகாபிநயம் எனவும், ஆடலாசிரியன் சதி, சொற்கட்டு முதலிய சொல்லப் பாத்திரமாடுவதை உபசப்த வாசிகாபிநயம் எனவும் கூறினார். (30)

## ஆகாரியத்தின் வகைகள்

**ஆகா ரியத்தை அறையுங் காலை**
**நிஜா காரியம் வியஜா காரியம்**
**வியபிசாரிய [1]மபிசா ரியாவொடு நான்காம்.** 31

(இ-ள்.) ஆகாரியாபிநயமாவது நிஜாகாரியம், வியஜாகாரியம், வியபிசாரியாகாரியம், அபிசாரியாகாரியம் என நான்காம் (எ-று.)

(ப-ம்.) பட்டுப் பீதாம்பரம் சரிகை முதலியவற்றினாற் செய்யும் காற்சல்லடம், மேகலாபாரம், இடைக்கச்சை, முலைக்கச்சை, முன்றானை முதலிய வஸ்திரம் தரித்துக்கொள்

(பா-ம்.) 1 'அபிசாகாரியும்'

வதை நிஜாகாரியம் எனவும், சொன்னத்தால் செய்த உச்சிப்பூ, தாழம்பூ, சடைக்குச்சு, இடைப்பட்டை, அரைஞாண், கால் வளை, சதங்கை, கைவளை, தோள்வளை, முத்தாரம், புஷ்ப ஹாரம் தரித்துக்கொள்வதை வியஜாகாரியம் எனவும், அந்த அந்தத் தேசத்திற்குத் தக்கவாறும் அந்த அந்தச் சாதி களுக்குத் தக்கவாறும் புராணாதி கதைகளை அபிநயத்துக் காட்டலை வியபிசாரியாகாரியம் எனவும், அந்த அந்த ஆட்டத்திற்குத் தக்கபடி வஸ்திராபரணம் தரித்துக்கோடலை அபிசாரியாகாரியம் எனவும் கூறினார்.

மேகலாபாரம் என்பது அடுக்குப் பாவாடை.

## குறிப்புரை

*சொன்னத்தால்—சொர்ணத்தால்; பொன்னால்.* (31)

## சாத்விகாபிநயத்தின் வகை

**சாத்விகா பிநயஞ் சாற்றுங் காலை**
**சாக்குசி வியஞ்சகந் தானிரண் டாமே.** 32

(இ-ள்) சாத்விகாபிநயமாவது சாக்குசிய சாத்விகாபி நயம், வியஞ்சக சாத்விகாபிநயம் என்று இரண்டு வகையாம் (எ-று.)

(ப-ம்) கண்களினால் அபிநயித்துக் காட்டுவதைச் சாக்ஷுஷிய சாத்விகாபிநயம் எனவும், சிரம், நேத்திரம் இவற்றால் அவ்விதச் சின்னங்களைக் காட்டி அபிநயிப்பதை வியஞ்சக சாத்விகாபிநயம் எனவும் கூறினார்.

## குறிப்புரை

*சாக்குசிய —சாக்ஷுஷிய; கண்களினால் காட்டுகிற.* (32)

## நடனம் முதலிய ஐந்து

**நடனம் நாட்டியந் தாண்டவம் நிருத்தியம்**
**நிருத்த மைவகைச் சத்தியி னிமித்தம்**
**ஆதியின் முனைவ னாடி யருளினன்** 33

(இ-ள்) ஆதிகாலத்திற் பரமேசுவரன் நடனம், நாட்டியம், தாண்டவம், நிருத்தியம், நிருத்தம் என்று ஐவகையாகச் சத்திகள் நிமித்தம் உலகத்தில் ஆடியருளினன் (எ-று.)

(ப-ம்) ஆதிசக்திக்காகச் சத்தியோஜாத முகமாகி நடித்ததை நடனம் எனவும், பராசக்திக்காக வாமமுகமாகி நடித்ததை நாட்டியம் எனவும், இச்சாசக்திக்காக அகோரமுகமாகி நடித்ததைத் தாண்டவம் எனவும், கிரியாசக்திக்காகத் தற்புருஷமுகமாகி நடித்ததை நிருத்தியம் எனவும், ஞானசக்திக்காக ஈசானமுகமாகி நடித்ததை நிருத்தம் எனவும் கூறினார். (33)

**அவையே,**
**உலகிற் பலவா றுரைப்பன வுரைப்பாம்** 34

(இ-ள்) நடனம், நாட்டியம் முதலியவற்றை உலகத்திற் பரத நூலுணர்ந்தோர் கூறுவனவற்றிற் சில கூறுவாம் (எ-று.)

(ப-ம்.) புராணாதி கதைகளுக்குத் தக்கபடி பல பாத்திரங்கள் தனித் தனியே வேடம் பூண்டு நான்குவித அபிநயங்களினால் நடிப்பதை நாடகம் எனவும், ஒரு பாத்திரமே முற்கூறிய முறையன்றி நான்குவித அபிநயங்களினால் நடித்துக் காட்டுவதை நாட்டியம் எனவும், ஆகாரியம் நீக்கி மற்றைய மூன்று அபிநயங்களினால் நடிப்பதை நிருத்தியம் எனவும், நான்குவித அபிநயம் முக, ரச, பாவம், ஜதி, சொற்

கட்டு, சுரம் முதலியவற்றுடன் நடிப்பதை நிருத்தம் [நிருத் தத்திற் கண்வதிதுடன் ஈரேழுபதினான்கு உலகத்தையும் தனது வியாபினி சக்தியால் தாண்டி வியாபித்து, அவற்றை யெல்லாம் தானாகவும் தானல்லவாகவு மென்றது][1] எனவும்; சீவகோடிகள்தோறும் தான் நிறைந்திருந்தும், காஷ்டத்தில் அக்கினிபோல மறைந்து நின்று, மாயையால் முன்னமே ஈதெல்லாம் 'அது தான்' என்ற சுருதியனுபவத்தை மறைப் பித்துத் தூல சூக்கும காரண சரீரங்களையும் அவற்றின் தொழில்களையும் யான் எனது என்று வேறுபடத் தோற்று வித்து· விளக்க, அவ்விளக்கத்தால் இவர்கள் திருஷ்டியில் அச்சிவத்திற்கு யான் அன்னியன்தான் என்ற அனுபவம் உதிக்க, அவ்வனுபவத்தால் வினைகளை அனுபவித்துச் சனன மரணங்களை அடைகின்றார்கள். இவ்வனுபவம் அச் சிவத்திட்த்து அன்மையால் தானல்லாகவும் என்று கூறினார்.

## வேறு

ஆடூஉ மகடூஉ வேடமிட்டு நடிப்பதை நடனம் எனவும், பெண் புருடவேடமிட்டு நடிப்பதை நாட்டியம் எனவும், புருடன் புருடனாகவே நடிப்பதை நிருத்தியம் எனவும், பெண் பெண்ணாகவே நடிப்பதை நிருத்தம் எனவும், பரமசிவமே தாண்டவாதிபதி எனவும் கூறுவாருமுளர்.

## குறிப்புரை

நடனம் முதலியவற்றின் மகாபரதசூடாமணி கூறும் இலக் கணங்கள் வருமாறு :

" பூட்டிய நாடகத்தின் பூருவ கதைக டம்மைக்
காட்டியே யபிந யித்தற் காமெனப் பரதநூலோர்
வாட்டமில் லாமற் சொன்ன வகையிதை யறிந்து கொள்ளே".

---

1 இங்ஙனம் கூறப்பட்ட இடம் விளங்கவில்லை.

" நிருத்தமாம் ரசபா வத்தை நீக்கிய அடைவினாலே
பொருத்தலின் யாசங் தாள வயந்தனைப் பொருந்தக் காட்டல்."

"நிருத்தியம் ரசபா வங்கள் நேர்கூட்டி வினியோ கித்தல்."

மேல் பதசாரத்தில் 'நிருத்தம் எனவும்' என்ற தொடர் ஒரு முடிபு பெற்று முடியவில்லை, (34)

## சாரி மூன்று

**ஆகாச சாரி யரும்பூ சாரி**
**தேசி சாரி மூன்றெனச் செப்பினர். 35**

(இ-ள்) *ஆகாசசாரி, பூசாரி, தேசிசாரி எனச் சாரி மூன்றெனக் கூறினார் (எ-று.)*

(ப-ம்) *அந்தரத்தாடும் தேவப்பெண்களின் நாட்டியத்தை ஆகாசசாரி எனவும், பூவுலகத்தாடும் பெண்களின் நாட்டியத்தைப் பூசாரி எனவும், நாகலோகத்தாடும் பெண்களின் நாட்டியத்தைத் தேசிசாரி எனவும் கூறினார்.* (35)

## இலாசியம் இரண்டு

**இலாசியங் குமாரஞ் சுகுமார மென்று**
**பேசின ரிரண்டாய்ப் பெரியோர் தாமே. 36**

(இ-ள்) *இலாசியமாவது குமாரம் என்றும், சுகுமாரம் என்றும் இரண்டு வகையாம் (எ-று.)*

(ப-ம்) *நிலையினின்று தாள லயத்துடன் அபிநயம் காட்டுவதைக் குமார லாசியம் எனவும், மேற்படி லாசியத்துடன் கீழிருந்து கத்திய பத்தியங்களுக்கும் விருத்தங்*

களுக்கும் அபிநயம் காட்டுவதைச் சுகுமார லாசியம் எனவும் கூறினார்.

தாண்டவ லாசியத்தைக் கூட்டி மூன்றென்பாரு முளர்.

## குறிப்புரை

கத்திய பத்தியங்கள்-வசனமும் செய்யுளும். தாண்டவ முதல் ஐந்து நடனங்களுள் இலாசியம் ஒன்றென்பர், மேல் 43-ஆம் சூத்திரத்தில். முன் 32 - ஆம் சூத்திரத்தில் இலாசியத்தை நீக்கி நிருத்தியத்தைக் கூட்டி ஐந்தென்றார் "உரைசுகுமார லாசியம் உட்கார்ந் தபிந யித்தல்"— மகாபரத சூடாமணி, 55. (36)

## விருத்தி இரண்டு

**விருத்தி சித்தம் பாவிய மிரண்டாம். 37**

(இ-ள்.) விருத்தியாவது சித்த விருத்தி, பாவியவிருத்தி என்று இரண்டு வகையாம் (எ-று.)

(ப-ம்.) சிங்காராதி நவரசங்களை முகத்திற் காட்டி அபிநயிப்பதைச் சித்தவிருத்தி என்றும், அஸ்தம் அங்கங்களினால் விஸ்தரித்துக் காட்டி அபிநயிப்பதைப் பாவிய விருத்தி என்றும் கூறினார்.

## குறிப்புரை

சிங்காராதி நவரசங்களும் - சிங்காரம் முதலிய ஒன்பது சுவைகளும். இவற்றை, 2-ஆம் சூத்திரக் குறிப்புரையிற் காண்க. விருத்தி - தொழில். அஸ்தம் - கை. (37)

## 2. இராகம்

இராகப் பகுப்பை யிசைக்குங்[1] காலை
ஏழுசுரக் கேதுவா மதன்பிரத் தாரம்
அதனிற் றோன்று மனேக ராகமும்
அதனிற் சனிக்குங் கிராமமூர்ச் சனைகளும்
மேள கர்த்தா வதிற்றோன் றிசையும்
இன்னு முளவெலா மிசைப்ப னாங்கே. 38

*நிறுத்தமுறையானே, பாவத்தைக் கூறி இராகத்தைக் கூறுகின்றார்.*

*(இ-ள்) சட்சம், ரிஷபம், காந்தாரம், மத்யமம், பஞ்சமம், தைவதம், நிஷதம் என்னும் சப்த சுரங்களும் அவற்றிற்கு ஆதாரமான மந்திரம், மத்யமம், தாரம், துத்தம்[2], சாளவம்[3], சங்கீரணம், ஷாடவம், ஔடவம், சம்பூரணம் முதலிய துவாதசப்பிராண யுக்தமாகிய கண்டம், அகண்டம் என்னும் சுரப்பிரத்தாரமும், அதனின்று வரும் வாதி, அனுவாதி, சம்வாதி, விவாதிகளும், சட்ஜாதிக் கிராம மூர்ச்சனைகளுக்குக் கடபயாதி[4] சங்கியை மேள கர்த்தா ராகம் 72-ம், அதிற் சன்னியராகம் 12-ம் இன்னுமுள வெல்லாம் இசையதிகாரத்திற் சொல்லுவன் (எ-று.)*

### குறிப்புரை

**வாதி :** இஃது ஆரோகண சுரம்; சரிகமபதநிச ரிகமபதநிச - கமபதநிச - மபதநிச - பதநிச-தநிச நிச - ச என்பது அது; பெரும்பாலும் தாராளப்போக்கையும், அரசனைப் போன்ற முக்கியத்தன்மையையும் பெற்றுப் பிரயோகத்திலுள்ள ஸ்வரமே வாதியாகும்.

---

(பா-ம்.) 1 'யியம்புங்' 2 'சுத்தம்' 3 'சாமளம்'
4 'கடபையாதி'

சம்வாதி : இஃது அவரோகணசுரம்; சநிதபமகரிச - நிதபமகரிச - தபமகரிச - பமகரிச - மகரிச - கரிச - ரிச - ச என்பது அது. எந்த இரண்டு ஸ்வரங்களுக்கிடையில் பன்னிரண்டு அல்லது எட்டுச் சுருதிகள் உளவோ அவை அமைச்சரைப்போன்ற ஸம்வாதிகளாம்.

விவாதி : இஃது அடக்குசுரம்; சமமகிரி - சரிகம - ரிப்ப மக - ரிகமப - கதபம - கமபத - தபம - பதநி - பச்சநித - பதநிசா என்பது அது. எந்த இரண்டு ஸ்வரங்களுக் கிடையிலே ஒரேயொரு சுருதிமட்டும் உளதோ அவை விவாதிகளாகும்.

அனுவாதி : இது பக்கசுரம்; சரிகர - ரிகமா - சமபா மபதா - பதநீ - தநிசா என்பது அது. இம்மூன்று பிரிவு களைத்தவிர உள்ள ஸ்வரங்கள் யாவும் அநுவாதிகளாம்; இவை ஊழியரைப்போன்று ஏனைய பிரிவுகளுக்குத் துணை செய்வனவாம்.

கிராம மென்பது சுரக் கூட்டம். இது சட்ஜக் கிராமம், மத்யமக் கிராமம், காந்தாரக் கிராமம் என மூவகைப்படும். இவை முறையே சரிகமபதநி - மபதநிசரிக - கமபதநிசரி என்பனவாம்.

ஆரோகணமும் அவரோகணமும் சேர்ந்தது மூர்ச்சை அல்லது மூர்ச்சனை ஆம். இது சட்ஜ மூர்ச்சனை, மத்யம மூர்ச்சனை, காந்தார மூர்ச்சனை என மூன்று விதமாயுள்ளது. இவற்றுள் ஒவ்வொன்றும் ஏழாக விரிவதால் மூர்ச்சனை 21 ஆகும்.

மேளகர்த்தா ராகம் 72. இவற்றுள் கனகாங்கி முதல் சல நாட்டை ஈறாகவுள்ள 36 ராகங்கள் சுத்தமத்யம மேள கர்த்தா வென்றும், சாலங்கம் முதல் ரஸிகப் பிரியா ஈறாகவுள்ள 36 ராகங்கள் பிரதிம மத்யம மேள கர்த்தா வென்றும் வழங்கப்பெறும். இவற்றின் விரிவு வருமாறு :

## சுத்த மத்யம மேளகர்த்தா 36

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | கனகாங்கி | | காயகப்பிரியா | | மாரரஞ்சனீ |
| | ரத்நாங்கி | | வகுளாபரணம் | | சாருகேசீ |
| | கானமூர்த்தி | | மாயாமாளவ கவுளை | | ஸரஸாங்கீ |
| | வனஸ்பதி | | சக்கரவாகம் | | ஹரிகாம்போஜீ |
| | மானவதீ | | ஸூரிய காந்தம் | | தீரசங்கராபரணம் |
| (6) | தானரூபி | (18) | ஹாடகாம்பரீ | (30) | நாக நந்தனீ |
| | ஸேனாபதி | | சங்காரத்வனி | | யாகப்பிரியா |
| | ஹநுமத்தோடி | | நட பைரவீ | | ராகவர்த்திநீ |
| | தேனுகா | | கீரவாணீ | | காங்கேய பூஷணீ |
| | நாடகப்பிரியா | | கரகரப்பிரியா | | வாகதீச்வரி |
| | கோகிலப்பிரியா | | கௌரீ மனோகரீ | | சூலினீ |
| (12) | ரூபாவதீ | (24) | வருணப்பிரியா | (36) | சல நாட்டை |

## பிரதிம மத்யம மேளகர்த்தா 36

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | ஸாலகம் | | தவளாம்பரீ | | காந்தாமணி |
| | ஜலார்ணவம் | | நாமநாராயணீ | | ரிஷபப்பிரியா |
| | ஸாலவராளி | | காமவர்த்தனீ | | லதாங்கீ |
| | நவநீதம் | | ராமப்பிரியா | | வாசஸ்பதி |
| | பாவனீ | | கமனசிரமம் | | மேசகல்யாணி |
| (6) | ரகுப்பிரியா | (18) | விச்வம்பரீ | (30) | சித்திராம்பரி |
| | கவாம்போதி | | சியாமளாங்கீ | | ஸுசரித்திரா |
| | பவப்பிரியா | | ஷண்முகப்பிரியா | | ஜோதிஸ்ரூபிணீ |
| | சுபாபந்துவராளி | | ஸிம்மேந்திர மத்யமம் | | தாதுவர்த்தனீ |
| | ஷட்வித மார்க்கிணீ | | ஹைமவதி | | நாஸிகாபூஷணீ |
| | ஸ்வர்ணாங்கீ | | தர்மாவதி | | கோஸல |
| (12) | திவ்யமணி | (24) | நீதிமதி | (36) | ரஸிகப்பிரியா |

கடபயாதி சங்கியை : கணிதத்திலும் இசைக் கலையிலும் எண்களை எண்ணும்பொருட்டு அறிஞர் வைத்துக் கொண்டுள்ள ஒரு குறிப்பாகும். (38)

## நாதத்தின் வகை

**நாத மிசைபண் ணிரண்டென நவில்வர்.** 39

(இ-ள்.) நாதமானது இராகம், பண் என இருவகையுடையதாம். (எ-று.)

## குறிப்புரை

நாதம், வருணாத்மகம் தொனியாத்மகம் என இருவகைத் தாம்; இது முன்னர் விளக்கப்பட்டது. (பக்கம் 8). கண்டத் தொனியை இசையப் பண்ணுவது பண் எனப்படும். (39)

## இசையும் பண்ணும்

**சிந்தி ராகம் பாவினம் பண்ணாம்.** 40

(இ-ள்.) கீர்த்தனம், கிருதி முதலியவற்றைக் கண்டத் தொனியாற் பாடுவதும், அத்தொனியை ஆலாபிப்பதும் சத்த சுரங்களினால் அலங்கரித்துப் பாடிக் காட்டுவதும் இசையாம்.

சிந்து—கீர்த்தனை, கிருதி. இராகம் - இசை.

பாவினமானது : வெள்ளை, ஆசிரியம், கலி, வஞ்சி என்னும் இவற்றோடு பா, தாழிசை, துறை, விருத்தம் என்னும் இவற்றை முறையே கூட்டி உறழ வரும், வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா, வெண்டாழிசை,

ஆசிரியத்தாழிசை, கலித்தாழிசை, வஞ்சித்தாழிசை, வெண்டுறை, ஆசிரியத்துறை, கலித்துறை, வஞ்சித்துறை, வெளிவிருத்தம், ஆசிரியவிருத்தம், கலிவிருத்தம், வஞ்சி விருத்தம் முதலாகிய எல்லாவற்றையும்.

தேமா, புளிமா, கருவிளம், கூவிளம் என்னும் ஈரசை யானும் காய், கனி என்னும் மூவசையானும் பிரித்துக் கண்டத் தொனியை இசையப் பண்ணுவதே பண்ணாம் (எ-று.)

## குறிப்புரை

பா + இனம் + பண் + ஆம் = பாவும் இனமும் பண்ணாகும். வெண்பா, ஆசிரியம், கலிப்பா, வஞ்சிப்பா என்னும் நான்கும் பாவினவகை, தாழிசை, துறை, விருத்தம் என்னும் மூன்றும் பாவினமாம்.

இச்சூத்திரவுரையில், பாவினமாவது என்பது 'பண்ணா வது' என்று இருத்தல் வேண்டுமென்று தோன்றுகிறது. (40)

## 3. தாளம்

**தாளமு மவற்றின தேதுவும் பிறப்பும்**
**அங்க மக்கர மைந்து சாதியும்**
**ஆறா தாரத் திருந்தா றங்கமும்**
**மற்று முளவெலாம் வகுப்ப னாங்கே.** 41

நிறுத்தமுறையானே, தாளம் கூறுவார்.

(இ-ள்.) தாளங்கள் அவற்றின் உற்பத்திக் காரண மாகிய காலம், மார்க்கம், கிரியை, அங்கம், அட்சரம், ஜாதி, கலை, இலயம், எதி, பிரத்தாரம் என்னும் தசப்பிராண

யுத்தங்களும், அங்கப் பிரமாணமாகிய சச்சபுடம் முதலிய நூற்றெட்டுத் தாளங்களும், அட்சரப் பிரமாணமாகிய துருவம் முதலிய சப்ததாளங்களும், ஜாதி ஐந்தினால் பெருக்க வரும் முப்பத்தைந்து தாளங்களும், மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆஞ்ஞை என்னும் ஆறாதாரங்களினின்று பிறந்த பிராமம், துருதம், லகு, குரு, புலுதம், காகபதம் என்னும் ஆறங்கங்களும் இன்னும் உளவெல்லாம் தாளவதிகாரத்திற் சொல்லுவன். (எ-று). (41)

## சார்பு நூல்கள்

நிறுத்த முறையானே, இதுகாறும் பரதமென்னும் பதத்துக்குப் பொருள்கூறிச் சார்புநூல் கூறற்குப் பரத கர்த்தாக்களையும் அவர் கூறும் நூல்களையும் கூறுகின்றார்.

## அம்பிகை செய்தது

அம்பிகை யானை முகற்கறு முகற்கும்
அருளி னுபதே சித்தனள் மாதோ, 42

(இ-ள்). உமாமகேசுவரியானவள் தனது திருக்குமாரர்களாகிய கணபதிக்கும் ஷண்முகர்க்கும் பரதநூலைக் கிருபையால் உபதேசித்தாள் (எ-று.) (42)

## கணபதி செய்தது

ஆனை முகன்றாண் டவமுத லைந்தை
ஆற்றி யரன்முன் னாடிய வதனால்
நிருத்த கணபதி நாம நிலைபெற்
றதன்பெய ரானூல் சாற்றி வசிட்டர்
ஆதிய முனிவர்க் கறைந்தனன் றானே. 43

(இ-ள்). கணபதியானவர் தாண்டவம், இலாசியம், நாட்டியம், நிருத்தம், நடனம் என ஐந்துவகை செய்து, அவற்றைத் தாமாடிச் சிவபெருமானால், "நிருத்தகணபதி" என்னும் சிறப்புத் திருநாமம் பெற்றுத் தம் பெயரால் நூல் செய்து வசிட்ட முனிவராதியர்க்கு உபதேசித்தனர் (எ-று.) (43)

## கந்தன் செய்தது

கந்த னால்வகைப் பாவ மூவிதப்
பிரபந்தங் கள்தன் பெயராற் செய்து
வாயு மதங்கற் குபதே சித்தனன்
அவனனு மற்குமீ ரொன்பா னாகும்
சித்தர் தமக்குஞ் செப்பினன் றானே. 44

(இ-ள்.) சுப்பிரமணியர் சித்தஜம், காத்திரஜம், வாகாரம்பம், புத்தியாரம்பம் ஆகிய நால்வகைப் பாவமும், புத்தியாரம்பானுபவத்தில் மூவிதப் பிரபந்தங்களும் விரித்துத் தம்பெயரால் நூல் செய்து வாயுதேவர் மதங்கர் முனிவராதியர்க்கு உபதேசித்தனர். வாயுதேவன் தனது புத்திரன் அனுமானுக்கும் பதினெண் சித்தர்க்கும் உபதேசித்தனன் (எ-று.) (44)

## அனுமன் செய்தது

அனுமன் விவாதிகள் கருவ மடங்க
அசல முருகக் குண்டகக் கிரியாவெனும்
இராகம் பாடி யடக்கி மேலும்
சன்னிய ராக மாறாயிரஞ் சமைத்ததற்
கனும கடக மெனும்பெய ரணிந்தனன். 45

(இ-ள்.) தம்முள் யாவர் பெரியவரென்று தெரியாது வாதாடி வந்த தும்புருநாரதர் முன் அனுமன் மலையுருகும் வண்ணம் குண்டக்கிரியாவென்னும் ஒரு ராகம் பாடி, அவர் களைக் கருவ மடக்கி யனுப்பிப் பின்னர்ச் சன்னியராகம் ஆறாயிரம் சமைத்து, அதற்கு அனும கடகமென்னும் பெயரைத் தரித்தனன்.

## குறிப்புரை

அகத்தியர் இராவணனைக் கந்தருவத்தால் இம்முறையே அடக்கினதாக ஒரு வரலாறு கூறப்படுகிறது.

அனுமத்தோடி என்பது 72 மேளகர்த்தா ராகங்களுள் ஒன்று. அனுமன் பாடிய தோடி என்று இது பொருள்படும். (45)

## காளி தேவி இயற்றியவை

**காளி சதிலய முகசிம் மளமே**
**பாதம் பேரணி சித்திரம் பட்டசம்**
**ஆதிய விருநூற் றீரெண் ணாட்டியம்**
**இசைத்தனள் சிவாசா ரியரா தியர்க்கே. 46**

(இ-ள்). காளிகாதேவி சதி, இலயம், முகசாலியம்[1], சிம்மளம், பாதம், பேரணி, சித்திரநாட்டியம், பட்டஜம் முதலிய இருநூற்றுப்பதினாறு நாட்டிய இலக்கணங்களைச் சிவாசாரியர் முதலியோர்க்கு உபதேசித்தனள் (எ-று.)

(ப-ம்). கால் தாளத்திற் சித்திரம் அமையும்படி பாடுவது சித்திர நாட்டியமாம்.

கத்திகள் தரித்தாடுவது, கட்டியாடுவது பட்டஜ நாட்டியமாம்.

---

(பா-ம்.) 1 'முகசாளயம்'.

## குறிப்புரை

முகசாலியம் : "சாலி யுணர்ந்து முகசா ளயம்பற்றி
நாலுவகைக் கையும் நலம்பெறவே-மேலுமினி
அட்டகோ ணந்திசைக ளாறு நிலத்தினில்
முட்ட முகசா ளயம்"

என்று—சுத்தாநந்தப் பிரகாச முடையார் முகசாலியத்தை விளக்குவார்.

சிம்மளம் : நிருத்தத்தின் மூவகைகளாகிய தேசி, வடுகு, சிங்களம் என்பவற்றுள் ஒன்று இது. இவை கொட்டுடனும் பாணியுட்னும் இசையுடனும் பொருந்தியன. இவற்றுள் வடுகு வன்மைக்கூத்து; சிங்களம் மென்மைக் கூத்து; தேசி மத்திமக் கூத்து.

"மெய்சாய் விடைநெளிவு மேற்சுழிவோ டரங்கணைத்தல்
கைதூக் கசைத்தல் கலைபற்றல்—கைகள்
விரித்தல் குவித்தலிவை சிங்களமா மென்று
தெரிவித்தனர் தண்டமிழோர் தேர்ந்து"

—சுத்தாநந்தப் பிரகாசம்

மெய்சாய்த்தல், இடைநெரித்தல், சுழித்தல், அணைத்தல், தூக்குதல், அசைத்தல், பற்றல், விரித்தல், குவித்தல் இவை ஒன்பதும் சிங்களத்துக் கைகள். சிலப்பதிகார உரையாசிரியர் கள் சிங்களத்துக்குத் தனியாகத் தொழில்கள் இல்லை என்பர். (சிலப். அரங்கேற்று காதை, 16, உரை.)

பாதம் : இது வைஷ்ணவம், ஸமபாதம், வைசாகம், மண்டலம், ஆலீடம், ப்ரத்யாலீடம் என ஆறாகும்,

(1) சமநிலையின் ஒருகால் பகிர்ந்து நெளிவாய் நிற்பது வைஷ்ணவம்.

(2) தலத்திற் பாதம் தம்மி லிசைந்து கலக்க மின்றி நிற்பது சமநிலை.

(3) தெளிதரு சமநிலை பகிர்ந்து முழந்தாள் நெளிவாய் நிற்பது வைசாகம்.

(4) பன்னிருவிரலிடை சமநிலை பகிர்ந்து மன்னி யிருப்பது மண்டலமாகும். அதுவே, நால்விரல் பற்றி நடத்தலும் உரித்தே.

(5) அதுவே, ஒரு கால் பக்கம் போக்கி அதின்மெய் சாய்த்தல் ஆலீட மென்ப.

(6) அது பின் முன் இயற்றல் பிரத்யா லீடம்.

—சுந்தாநந்தப் பிரகாசம்.

பேரணி நாட்டியமாவது "பாவம தின்றித் தாளத்தி னோடே பகர்தத்தின் தொன்னமென் சொல்லை, மேவிமட் கலத்தின் மீதினி னின்று ஏகதா ளத்தை யோரிகையின், மேவிமற் றொருகை தனிலன்ய தாளம் விளங்கவே நடிப்பதா மெனவே, கூவிளம் புனையுமர நந்தி கேட்கக் கூறின னிதை மனங் கொள்ளே."

பட்டஜம் அல்லது கத்திநாட்டியத்தின் விவரமாவது: "இசையநாற் கால்கள் நாட்டி ஈராறங் குலத்தின் மேலே, பசைகொளும் ஈரெண் கத்தி பாங்குடன் கட்டி யப்பால்' அசிமைய நுனியி னின்று ஆடக்கா மார்த்த மோக்கம், எசம தாய்த் தருமென் றீசன் இயம்பினன் நந்திக் கன்றே"—மகா பரதசூடாமணி 1003, அசி+மைய+நுனி; அசி - ஆயுதம். (46)

## திருமால் செய்தது

அரிநா தத்தை வருண தொனியாத்மக
மென் றிரண்டியற்றிக் கீதப் பிரபந்த
நூலை நூற்றுத் தண்டு முனிவ
ராதி யோர்க்கங் கறைந்தனன் றானே. 47

(இ-ள்.) விஷ்ணு நாதத்தை வருணாத்மகம், தொனி யாத்மகம் என இரண்டாக்கி, கீதப்பிரபந்தம் என்றொரு நூல் செய்து தண்டு முனிவராதியோர்க்கு உபதேசித்தனர் (எ-று.) (47)

## பிரமன் செய்தது

அயனிருக் கேயசுர் சாம மதர்வணத்
திருந்து முறையே வாத்திய மபிநயம்
கீத மிரத மாக்கிக் கலைமகள்
சுரர்கள் முனிவ ராதியர்க் குரைத்தனன். 48

(இ-ள்.) பிரமதேவன் இருக்கினின்று வாத்தியமும் யசுசினின்று அபிநயமும். சாமத்தினின்று கீதமும், அதர் வணத்தினின்று இராகமும் ஆகிய இந்நான்கினையும் வேத சாரமாக எடுத்துத் திரட்டிச் சரசுவதி சுரர்கள் முனிவராதி யர்க்கு உபதேசித்தனன் (எ-று.) (48)

## சரசுவதி செய்தது

அன்னவ ளரம்பை யூர்வசிக் கறைந்தனள். 49

(இ-ள்.) அச்சரசுவதி இப்பரதத்தை அரம்பை, ஊர்வசி முதலிய பேருக்கு உபதேசித்தனள் (எ-று.) (49)

## இந்திரன் செய்தது

**அமரர்கோன் பாவ நான்க தாக்கி**
**ஐயிரண் டெட்டோ டரும்வாத் தியங்களின்**
**இலக்கண மருச்சுன னெழினட சேகரர்க்**
**கியம்பின னவனுத் தரைக்கீந் தனனே.** 50

(இ-ள்.) இந்திரன் ஆங்கிகம், வாசிகம், ஆகாரியம் சாத்விகம் எனப் பாவம் நான்காக வகுத்து, அவற்றையும் அஷ்டாதச வாத்தியங்களின் இலக்கணங்களையும் அருச்சுனன், நடசேகரன் ஆதியர்க்கு உபதேசித்தனன். அருச்சுனன் விராடதேசத்து உத்தரைக்கு உபதேசித்தனன் (எ-று.) (50)

## பிரகஸ்பதி செய்தது

**பிரகஸ் பதியாங் கிகமா றாகவும்**
**வாசிக மிருவித மாகா ரியமவ்**
**விருவகை யாகச் சாத்விக மன்னதாய்**
**ஆக்கிப் பவமுனி யாதியர்க் களித்தனன்.** 51

(இ-ள்.) பிரகஸ்பதி சூசகம, பாவம, துவந்தம், ஆவாகியதுவந்தம், அனுபாவிகதுவந்தம், லாக்ஷணிகம்... [1]என இருவகையாக வாசிகத்தையும், நிஜாகாரியம், அபிசாரியாகாரியம் என அவ்வகையாக ஆகாரியத்தையும் சாக்ஷுஷிய சாத்விகம், வியஞ்சக சாத்விகம் என இருவகை

---

1. பிரதி செய்தவர்கள் இங்கே ஒரு பகுதியை எழுதாமல் விட்டிருத்தல் வேண்டுமென்றும், அப்பகுதி "என அறுவகையாக ஆங்கிகத்தையும், சப்தவாசிகாபிநயம், கீதவாசிகாபிநயம்'' என்று இருத்தல் வேண்டுமென்றும் தோற்றுகிறது.

யாகச் சாத்விகத்தையும் வகுத்துப் பவமுனிவராதியர்க்கு உபதேசித்தனன் (எ-று). (51)

## சுக்கிரர் செய்தது

சுக்கிர னெழுவகைத் தோற்றந் தமக்கும்
ஏழெண் டேயத் திறைவர் தமக்கும்
ஒன்பான் கிரகங் களுக்கு நிறீஇப்பின்
இராவண போதா யனர்க்கிசைத் தனனே. 52

(இ-ள்.) சுக்கிராசாரியன் தேவர், மனிதர், மிருகம், பட்சி, நீர்வாழ்வன, ஊர்வன, தாவரம் முதலிய சராசரங்கட்கும், ஐம்பத்தாறு தேச இராசாக்களுக்கும் நவக்கிரகங்கட்கும் அபிநய நிர்மாணஞ்செய்து இராவணன் போதாயனர் முதலியோர்க்கு உபதேசித்தனன் (எ-று.) (52)

## இராவணன் செய்தது

இராவணன் மறைகளை யிசையோ டோதவும்
எழுதாதி னின்றும் மேழ்சுர மெடுத்தும்
பத்தியிற் சாமம் பாடிப் பரசிவன்
கருணையிற் பாதல நின்றுகரை யேறினன். 53

(இ-ள்.) இராவணன் வேதங்களை உதாத்தம், அனுதாத்தம், சுவரிதம், பிரசயம் என்னும் ஓசை தழுவி ஓதும்படி, சங்கிதை, சாகை, பதம், கிரமம், ஜடை, வருணம், கனம் என்னும் சத்ததாதுக்களினின்று சரிகமபதநி என்னும் ஏழுசுரமெடுத்து வெளிசெய்து, சாமகானம் பாடிப் பரமசிவத்தின் திருவருளாற் பாதலத்தினின்றும் கரையேறினான் (எ-று.) (53)

## சூரியன் செய்தது

**சூரியன் சந்திரர் நாகசுர முதலிய**
**துளைதோற் கருவி வாத்திய விலக்கணம்**
**சுவேத முனிமுத லியோர்க்குச் சொற்றனன். 54**

(இ-ள்.) சூரியன் சந்திரன் நாகசுர முதலிய துளைக் கருவி, தோற்கருவி வாத்தியங்கள் 32க்கும் இலக்கணங் கண்டு சுவேத முனிவராதியர்க்கு உபதேசித்தனன் (எ - று.) (54)

## நந்திகேசுவரர் செய்தது

**நந்தி நாட்டிய நிருத்திய நிருத்தம்**
**ஒரோஒ வொன்றையு மிருவகை யுஞற்றி**
**அவற்றையுங் கஞ்சக் கருவி யாதிய**
**வாத்திய விலக்கணம் பிருங்கி முனிவர்**
**உருத்திர கணிகைய ரவர்சுதர்க் குரைத்தனர். 55**

(இ-ள்.) கணநாதராகிய நந்திகேசுரர் நாட்டியம், நிருத்தியம், நிருத்தம் என்னும் மூன்றனுள் ஒவ்வொன்றையும், உத்தான தாண்டவம், சுகுமாரலாசியம், என்றிருவகை செய்து, அவற்றையும் கஞ்சக் கருவியாதி வாத்திய இலக் கணங்களையும் பிருங்கி முனி, உருத்திர கணிகையர் அவர் புத்திரர் முதலியோர்க்கு உபதேசித்தனர் (எ-று.) (55)

## அகத்தியர் செய்தது

**அகத்திய னவயவ பேதநா லேழனுள்**
**ஒரோஒ வொன்றை யிரண்டிரண் டுஞற்றி**
**அவற்றை நான்கொடு நந்நான் காக்கிச்**
**சிவன்சிலை முறையே வொருமையைத் தெரிந்து**
**ராச சேகர வழுதிக் கிசைத்தனன். 56**

(இ - ள்.) அகத்தியன் அங்க, உபாங்க, பிரத்யங்க அவயவ பேதம் இருபத்தெட்டனுள் ஒவ்வொன்றையும் சாயீ, சஞ்சாயீ, விவசாயீ, அனுசாயீ என நான்காக வகுத்து அவற்றையும், சதுராங்கம் சிவதாண்டவத்திற்கும். சோடசாங்கம் சக்தி தாண்டவத்திற்கும் உரிமையுடையன என்பதையும் இராஜசேகர பாண்டியனுக்கு உபதேசித்தனன் (எ-று.)

## குறிப்புரை

சிரம், இருகண், கை, கால் இவை நான்கும் அங்கமெனப் படும்.

இதழ், புருவம், பக்கம், ஒக்கலை இவை நான்கும் உபாங்கம் எனப்படும்.

அங்கக்கிரியை 16 ஆவன; சரிகை, புரிகை முதலியன (பக்கம் 57 பார்க்க.)

இராசசேகரன் : இவன் மதுரையை ஆண்ட பாண்டிய மன்னன். இவன் கூத்து நூல்களைக் கற்றுத் தேர்ந்து அக் கலையில் வல்லவனாக இருந்தான். சோமசுந்தரக் கடவுள் இவன் பொருட்டு மதுரையில் வெள்ளியம்பலத்தில் தம் காலை மாற்றி ஆடினாரென்பது திருவிளையாடற் புராணத்திற் கண்ட வரலாறாகும். (56)

## வசிட்டர் செய்தது

**வசிட்டன் முகங்கண் மூக்கொடு வன்கரம்**
**பாதஞ் செவிபோற் பன்னு முறையே**
**சத்தஞ் சோதிடஞ் சிக்ஷை கற்பம்**
**சந்தசு நிருத்த மாஞ்சதுர் மறையின்**

**அங்க மவற்றுள் நிருத்தமென் றிதனைச்**
**சத்தி பராசரன் வியாசற்குச் சாற்றினன்.** 57

(இ-ள்) வசிட்டன் முகம்போலும் சத்தம், நேத்திரம் போலும் சோதிடம், கிராணம் போலும் சிக்ஷை, கரம்போலும் கற்பம், பாதம்போலும் சந்தசு, செவிபோலும் நிருத்தம் ஆகிய வேதாங்கம் ஆறனுள் நிருத்தத்தினின்று பரதத்தை யெடுத்துச் சிறப்பித்துச் சத்திமுனி, பராசரமுனி, வியாச முனி இவர்கட்கு உபதேசித்தனன் (எ-று.) (57)

## வியாசர் செய்தது

**வியாசன்,**
**சன்னிய ராகஞ் சகத்திர மாக்கி**
**அன்னதைத் தன்னருஞ் சீடர்க் கறைந்தனன்.** 58

(இ-ள். வியாசன் சன்னியராகம் ஆயிரஞ் செய்து அவற்றைத் தனது சிடபரம்பரைக்கு உபதேசித்தனன் (எ-று.)

*அவ்வயிர ராகமும் வியாச கடகம் எனப் பெயர்பெறும்.*
(58)

## நாரதர் செய்தது

**நாரத னரப்புக் கருவிநல் வாத்தியம்**
**இலக்க ணங்களு மிராகசுர விரிவும்**
**திரிலோ கத்துள செவ்வி யோர்க்குத்**
**தெரிவுற வன்பிற் செப்பினன் றானே.** 59

(இ-ள்.) நாரதன் நரப்புக்கருவி, வாத்திய இலக்கணம், இராக, சுர, விஸ்தாரம் முதலியவற்றைத் தேவலோகத்தில் விசுவாவசு முதலிய கந்தர்வர், பாதாளத்தில் ஆதிசேஷன், வாசுகி முதலிய நாகர், பூலோகத்தில் தத்திலாதி முனிவர், கோஹளாதி முனிவர் இவர்கட்கு உபதேசித்தனன் (எ-று.)
(59)

## தத்தில கோகளர் செய்தது

தத்திலன் விக்கிரமன் றனக்குங் கோகளன்
போசமன் னற்கும் புகன்றனர் றாமே 60

(இ-ள்.) வெளிப்படை. (60)

## தும்புரு

தும்புரு கண்டத் தொனியி னிலக்கணம்
இராக விரிவுந் தெரிந்துய ராஞ்ஞை
வற்க ராதியர்க்கு வகுத்தனன் றானே. 61

(இ-ள்.) வெளிப்படை. (61)

## வீரவல்லபன்—பரதமுனி

வீரவல்ல பன் விவிதநாட் டியத்தையும்
அவற்றின தடைவும் வாத்திய வணியும்
கண்டான் பரத முனிப்பெயர் கருணையிற்
கொண்டங் குழைக்குப தேசித் தனனதை
அன்னவ ளுத்தர மத்திய தெக்கிண
அரிவையர்க் குங்கோ பிகைக்கு மளித்தனள். 62

(இ-ள்). வீரவல்லபாசாரியன் சுத்தசாரி, ஆகாசசாரி, பூசாரி, தேசிசாரி என்னும் நால்வகை நாட்டியங்களையும் அவற்றின் தட்டடைவு[1] முதலிய அடைவு சாதிகளும் கஞ்சக் கருவி முதலிய வாத்திய இலக்கணங்களும், கண்டு சிவபெருமானாற் பரத முனிவனென்னும் சிறப்புத் திருநாமம் பெற்று உஷா தேவிக்கு உபதேசித்தனன். அவள் உத்தர தேசத்து க்ஷத்திரியப் பெண்கள், மத்திய தேசத்து வைசியப்

(பா-ம்) 1 'கட்டடைவு'

பெண்கள், தக்ஷிணதேசத்து வேளாளப் பெண்கள், துவாரகாபுரி கோவியர்கள் இவர்களுக்கு உபதேசித்தனள் (எ-று)

## குறிப்புரை

"உரைத்திடும் அங்க மூன்றில் உதித்திடு மவயவங்கள்
நிரைத்திடும் இருபத்தெட்டாய் நிகழ்த்திடும் தேசிச்சாரி''

"விரித்தது முப்பத் தைந்து விளங்குமா காசச்சாரி"

"ஈரெட்ட தாம்பூ சாரி''

''ஓரெட்டிற் பாதி சுத்த மண்டல மென்றே யோதும்,''
—மகாபரத சூடாமணி

*கஞ்சக்கருவி—தாளம் முதலிய வெண்கலக் கருவிகள்.*

## சாரங்கதேவன் மஹாபரதம், மஹாபரதசூடாமணி

சாரங்க தேவன் றன்பெரு முணர்வால்
நவரச முகத்தினும் பதார்த்த மத்தத்தினும்
இராக மங்கத்தினுந் தாளம் பதத்தினும்
சித்தம் சிவத்தினுஞ் செய்து நிர்த்திக்க
அவன்சிங் கார சேகரப் பெயரடைந்து
தன்மதம் பிறர்மத முறவோ ரிலக்கங்
கிரந்த முடையவோர் சார்புநூல் கிளத்தி
அதற்கு மாபரத மெனும்பே ரளித்தனன்
பின்னர்ச்சில் வாணாள் பல்பிணி யுடைய
சிற்றறி வினரிதைக் கற்ற லரிதெனத்
தெரிந்ததைச் சுருக்கிநாற் சகத்திரஞ் செய்து
மாபரத சூடாமணிப்பெயர் புனைந்து
சோமநா தற்குச் சொற்றனன் றானே.

(இ-ள்) வெளிப்படை.

(ப - ம்.) மாந்தர்க்கு நாளொன்றுக்குச் சுவாசம் இருபத்தோராயிரத்து அறுநூறென்று தத்துவ நூலார் கூறியிருக்கின்றார்; அவற்றை 20-ஆல், 40-ஆல், 60-ஆல், 80-ஆல் பெருக்க, 4,32,000, 8,64,000, 12,96,000, 17,28,000 வருடங்களாம். இவை முறையே கலி, துவாபர, திரேதா, கிருத வெனும் யுகங்களாம். இவற்றுள் கிருதயுக மாந்தர்க்கு லக்கமும்[1] திரேதாயுக மாந்தர்க்குப் பதினாயிரமும், துவாபரயுக மாந்தர்க்கு ஆயிரமும், கலியுக மாந்தர்க்கு நூறு வருடமும் ஆயுளாம். இவ்வாயுள் அற்பமாதலிற் 'சில வாழ்நாள்' என்றார்.

முதல் யுகத்தாருக்கு ஆகாரம் அவரவர் வாயில் ஊறா நின்ற அமிர்தமாம்; இரண்டாம் யுகத்தாருக்கு ஆகாரம் அதனுடன், வாயுபட்சணமாகும்; மூன்றாம் யுகத்தாருக்கு இலை, காய், கனி, கிழங்கு முதலியவாம். நான்காம் யுகத்தாருக்கு அன்னம் முதலியவாம். இவ்வன்னம் விளையுங்கால் நோய்பட்டே விளைந்து வருதலால் அதனை யுண்பாரும் நோய் அடைதலிற் பல்பிணி என்றார்.

பரத தத்துவத்தை அறியும் அறிவில்லாதாரைச் சிற்றறிவினரென்றார்.

இங்ஙனம், கலியுக மாந்தர் அற்ப ஆயுள், அசாரவுணவு, அற்ப அறிவு இவற்றினை யுடையராதலின் பரந்த நூல் பார்க்க மாட்டாமையறிந்து, சிறந்த நூல்களையும் சிறிதாகச் சுருக்கி யென்றார்.

அசாரவுணவு—சாரமற்ற போசனம். (63)

---

(பா-ம்.) 1 'நூறாயிரமும்'.

## II. ஆசிரியன் தன்மை

நிறுத்த முறையானே, ஆசிரியன் தன்மை கூறுவான் தொடங்கி ஆசிரியர்க்கெல்லாம் பொதுத்தன்மை கூறுகின்றார்.

(64) ஈவோன் றன்மை யீத லியற்கை
மலைநிலம் பூவே துலாக்கோ லென்னும்
இன்னரு ளுலைவி லுணர்வுடை யோரே. 64

என்னும் இதனுள், [மலை முதலியவற்றின் தன்மைகளை]

"மலையே,
அளக்க லாகாப் பெருமையு மருமையும்
மருங்ககல முடைமையு மேறற் கருமையும்
பொருத்தக் கூறுப பொச்சாப் பின்றி",

"நிலத்தி னியல்பே நினைக்குங் காலை
பொறையுடை மையோடு [1]செய்பாங் கமைந்தபின்
விளைதல் வன்மையும் போய்ச்சார்ந் தோரை
இடுதலு மெடுத்தலு மின்னண மாக
இயையக் கூறுப வியல்புணர்ந் தோரே",

"பூவின தியல்பே பொருந்தக் கூறின்
மங்கல மாதலு நாற்ற முடைமையும்
காலத்தின் மலர்தலும் வண்டிற்கு ஞெகிழ்தலும்
கண்டோ ருவத்தலும் விழையப் படுதலும்
உவமத் தியல்பி னுணர்த்தி[2]க் காட்டுப",

"துலாக்கோ லியல்பே தூக்குங்காலை
மிகினுங் குறையினு நில்லா தாகலும்

(பா-ம்) 1 'செய்யாங்' 2 'லுணரக்'

ஐயந் தீர்த்தலு நடுவு நிலைமையோ
டெய்தக் கூறுப வியல்புணர்ந் தோரே"

என்னும் இந்நான்கினும் கண்டு கொள்க.

## குறிப்புரை

64 ஆஞ் சூத்திரம் (பொருள் விளங்காதவாறு) பிரதிகளிற் காணப் பட்டபடியே பதிப்பிக்கப்படுகிறது. 64

## ஆடலாசிரியன்

*நிறுத்த முறையானே, ஆடலாசிரியற்குச் சிறப்புத் தன்மை கூறுகின்றார்.*

(65) இருவகைக் கூத்தி னிலக்கணங் களையும்
பல்வகைக் கூத்தும் விலக்கிற் புணர்த்துப்
பன்னீ ராடலும் பாட்டும் கொட்டும்
விதிநூற் கொள்கையும் விளங்க வறிந்தாங்
காடலும் பாடலும் பாணியுந் தூக்கும்
கூடிய நெறியிற் குலவுங் காலை
ஒற்றை யிரட்டை முத்திரை நிருத்தம்
உற்றகை யுணர்ந்து கூத்துவருங் காலை
ஆட னிகழிடத் தவிநய மின்மையும்
அவிநய நிகழிடத் தாட லின்மையும்
குரவையும் வரியும் விரவல[1] செலுத்தி
ஆடற் கமைந்தவ னாசிரிய னென்ப. 65

(இ-ள்.) இருவகைக் கூத்தாகிய அகக் கூத்தின் இலக்கணங்களையும், பலவகைப்பட்ட புற நாடகங்களையும், விலக்குறுப்புக்களையும் சேரப்புணர்க்க வல்லவனாகியும் ஆனந்தமுதற் சுத்த மீறாகக் கிடந்த பன்னிரு கூத்துக்

(பா-ம்.) 1 'விரவா'

களும், அக்கூத்துக்குரிய பாட்டுக்களும் அவற்றிற்கிசைந்த மத்தளங்களின் கூறுகளும் நூல்களில் விதித்த வழியே தெரிந்து, கூத்தும் பாட்டும் தாளங்களும் தாளங்களில் வந்த வளர்ச்சியும் தம்மிற்கூடிய நெறியையுடைய அகக்கூத்து புறக்கூத்து முதலாயின நிகழ்த்துமிடத்து ஒற்றைக்கை, இரட்டைக்கை, முத்திரைக்கை, நிருத்தக்கை என்று சொல்லப்பட்ட நால்வகைக் கைகளையுமுணர்ந்து ஆடல் வரும்போது அகக்கூத்து நிகழுமிடத்து அவிநயம் நிகழாமலும், அவிநயம் நிகழுமிடத்து ஆடல் நிகழாமையும், குரவைக் கூத்தும் வரிக் கூத்தும் தம்முள் விரவாதபடியும் செலுத்தி ஆடற் கமைந்தவன் ஆடலாசிரியன் (எ-று.)

## குறிப்புரை

இச்சூத்திரம் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை 12-25 அடிகளைத்தழுவர அமைந்ததது.

"இருவகைக் கூத்தின் இலக்கண மறிந்து
பலவகைக் கூத்தும் விலக்கினிற் புணர்த்துப்
பதினோ ராடலும் பாட்டும் கொட்டும்
விதிமாண் கொள்கையின் விளங்க வறிந்தாங்
காடலும் பாடலும் பாணியும் தூக்கும்
கூடிய நெறியின கொளுத்துங் காலைப்
பிண்டியும் பிணையலும் எழிற்கையும் தொழிற்கையும்
கொண்ட வகையறிந்து கூத்துவரு காலைக்
கூடை செய்தகை வாரத்துக் களைதலும்
வாரம் செய்தகை கூடையிற் களைதலும்
பிண்டி செய்தகை யாடலிற் களைதலும்
ஆடல் செய்தகை பிண்டியிற் களைதலும்
குரவையும் வரியும் விரவல செலுத்தி
ஆடற் கமைந்த ஆசான் றன்னொடும்"

(அரங்கேற்று. 12-25.)

உரையும் பெரும்பாலும் அடியார்க்குநல்லாருரையைத் தழுவியுள்ளது.

பன்னிரு கூத்துக்கள் : இந்நூல் 2 ஆஞ் சூத்திரத்துட் கூறப்பெற்றுள்ளன.

கொட்டு என்பதற்கு அடியார்க்கு நல்லார், 'வாச்சியங்களின் கூறுகளும்' என்று பொருள் கொள்வர். இவ்வுரையாசிரியர் பொழிப்புரையில், 'மத்தளங்களின் கூறுகளும்' என்றாரேனும் பதசாரத்தில் அங்ஙனமே கூறுகிறார்.

தூக்கும் என்பதற்கு இவர் தாளங்களின் வழிவந்த வளர்ச்சியும் என்று பொருள் கொள்ள, அடியார்க்கு நல்லார், 'தூக்குக்களும்' என்றே கூறுகிறார். தூக்குக்கு இரண்டு மாத்திரை; வடிவு உ; தொழில் தாக்கித் தூக்குதல்.

பிண்டி, பிணையல், எழிற்கை, தொழிற்கைகளை இந்நூலாசிரியர் ஒற்றைக்கை, இரட்டைக்கை, முத்திரைக்கை, நிருத்தக்கை என்பர். இரண்டும் ஒன்றே.

தேசி, வடுகு, சிங்களம் : இவற்றின் செய்திகளை 46-ஆம் சூத்திரத்தின் குறிப்புரையிற் காண்க.

"அறுவகை நிலையும் ஐவகைப் பரதமும்" இச்சூத்திரத்திற்கண்ட அறுவகை நிலை முதலியன இன்னவென்று அடியார்க்கு நல்லார் விளக்காமல், 'இவை விரிப்பிற் பெருகும்' என்று கூறிப்போந்தார். இவ்வுரையாசிரியர் விளக்குகிறார்.

'வருத்தனை நான்காவன' : அவை இன்னவை என இரு பிரதிகளிலும் எழுதப்படவில்லை. பிரதிசெய்தவர்களால் விடப்பட்டிருக்க வேண்டும். அவை : அபவேட்டிதம், (ஆவேஷ்டிதம்). உபவேட்டிதம் (உத்வேஷ்டிதம்). வியாவர்த்திதம், பரிவர்த்திதம் என்பன (சுத்தானந்தப் பிரகாசம்.)

## பொருள் விளக்கம்

(1) இருவகைக் கூத்தாவன :

' சாந்திக் கூத்தும் விநோதக் கூத்துமென்
றாய்ந்துற வகுத்தன னகத்தியன் றானே''

''சாந்திக் கூத்தே தலைவ னவிநயம்
ஏந்திநின் றாடிய வீரிரு நடமவை
சொக்க மெய்யே யபிநய நாடகம்
என்றிப் பாற்படூஉ மென்மனார் புலவர்.''

என்பதனால், நாயகன் சாந்தமாக ஆடிய கூத்து சாந்திக் கூத்தெனப்படும்.

சொக்கமென்பது சுத்த நிருத்தம்; அது நூற்றெட்டுக் கரணமுடைத்து.

மெய்க்கூத்தாவது : தேசி, வடுகு[1], சிங்களம் என மூவகைப்படும்; இவை மெய்த்தொழிற் கூத்தாதலின் மெய்க் கூத்தாயின.

அபிநயக் கூத்தாவது : நிருத்தக்கை தழுவாது பாட்டின் பொருளுக்குக் கைகாட்டி வல்லபஞ் செய்யும் பலவகைக் கூத்து.

நாடகம் - கதை தழுவிவருங் கூத்து.

விநோதக் கூத்தாவது : குரவை, கலிநடம், குடக் கூத்து, கரணம், நோக்கு, தோற்பாவை என்பனவாம்.

இவற்றுட் குரவை யென்பது காமமும் வென்றியும் பொருளாகக் குரவை செய்யும் பாட்டாக[2] எழுவரேனும்

(பா-ம்.) 1 'வடுகம்' 2 'பாடாக'

எண்மரேனும் ஒன்பதின்மரேனும் கைபிணைத்தாடுவதாம். குரவை - வரிக்கூத்தினுறுப்பு.

கலிநடம் என்பது கழாய்க்கூத்து.

குடக்கூத்தென்பது முன்னர்] [பொதுப்பாயிரத்துட் கூறின பன்னீராட்டலாம்].*

கரணம் என்பது படிந்தவாடலாம்.[1]

நோக்கென்பது பாரமும் நுண்மையும் ஆய்வும் முதலாயினவுடையது.

தோற்பாவை யென்பது தோலாற்பாவை செய்து ஆட்டுவிப்பதாம்.

இவற்றின் இலக்கணங்களாவன :

"அறுவகை நிலையு மைவகைப் பாதமும்
ஈரெண் வகைய வங்கக் கிரியையும்
வருத்தனை நான்கும் நிருத்தக்கை யெண்ணான்கும்
அத்தகு தொழில வாகு மென்ப."

(இ-ள்.) அறுவகை நிலையாவன :—வைணவம், சமநிலை, வைசாகம், மண்டலம், ஆலீடம், பிரத்தியாலீடம் என்பன. †

(பா-ம்) 1 'பணிந்தாடலாம்'

* கூறிய இடம் 2 ஆஞ் சூத்திரம். பன்னீராடலுள் ஒன்று என்று இருத்தல் வேண்டும்.

† இவற்றின் இலக்கணங்களை 46 ஆம் சூத்திரத்திற் காண்க.

ஐவகைப் பாதமாவன :

''சமநிலை, உற்கடிதஞ் சஞ்சாரங் காஞ்சிதம்
குஞ்சித மாகக் கொள்ளுவர் நூலோர்."

அங்கக்கிரியை பதினாறாவன :—சரிகை, புரிகை, சமகலி. திரிகை, ஊர்த்துவகலிகை, பிருட்டகம், அருத்தபிருட்டகம், சுவத்திகம், உல்லோலம், குர்த்தனம் (குட்டணம்) வேட்டனம், உபவேட்டனம், தாளப்பதப்பிராய விருத்தம், [1]உபேக்ஷணம், அபேக்ஷணம், நிகுஞ்சனம் என்பனவாம்.

வருத்தனை நான்காவன :

நிருத்தக்கை, முப்பத்திரண்டாவன : அங்கவதிகாரத்தில்* நிருத்தக்கையிற் காண்க.

வென்றிக்கூத்தும் வசைக்கூத்தும் தாள இயல்புடையன.

பல்வகைக் கூத்தாவன:—வென்றிக்கூத்து, வசைக் கூத்து, விநோதக் கூத்து முதலியன.

அவற்றுள்,

''மாற்றா னொடுக்கமும் மன்ன னுயர்ச்சியும்
மேற்படக் கூறும் வென்றிக் கூத்தே.''

''பல்வகை யுருவமும் பழித்துக் காட்ட
[2]வல்ல னாதல் வசையெனப் படுமே."

---

(பா - ம்) 1 'உக்ஷேபணம், அபக்ஷேபணம்'. 2 "வல்லவ னாதல்",

* அங்கவதிகாரம் என்பது இந்நூலின் ஒரு பிரிவு: இக்காலத்தில் அது கிடைக்கவில்லை,

"இதுவுந் தாளத் தியல்பின தாகும்."

''விநோதக் கூத்து வேறுபா டுடைத்து
வென்றி விநோதக் கூத்தென விளம்புவர்."

(இ-ள்.) கொடித்தேர் மன்னருங் குறுநில மன்னரும் முதலாக உடையோர் பகை வென்று இருந்தவிடத்து விநோதங் காணுங் கூத்தென்பதாம்.

(2) 'விலக்கினிற்புணர்த்து' என்றது, வென்றிக் கூத்து முதலாகிய பலவகைப்பட்ட புற நாடகங்களையும், வேந்து விலக்கு, படை விலக்கு, ஊர் விலக்கு என்று சொல்லப்பட்ட விலக்குகளாகிய பாடல்களுக் குறுப்பாகி வருவனவற்றுடனே பொருந்தப் புணர்த்தி என்றவாறு.

(3) 'பாட்டும்' என்றது, முன்னர்க் கூறிய பன்னீராட்டிற் குரிய பாட்டுக்களும், 'கொட்டும்' என்றது அகக் கூத்தின் விகற்பங்களுக்கெல்லாம் அமைந்த வாச்சியக் கூறுகளும். அவை கீதாங்கம், நிருத்தாங்கம், உபயாங்கம் என்பன. அவற்றுள் கீதாங்கம் கீதத்துக்கு வாசிப்பது; நிருத்தாங்கம் நிருத்தத்துக்கு வாசிப்பது; உபயாங்கம் இரண்டிற்கும் வாசிப்பதாம்.

(4) நூல்களில் விதித்த முறையால் விளங்கவறிந்து.

(5) 'ஆடலும்' என்றது, முற்கூறிய அகக் கூத்தினும் புறக் கூத்தினுமுள்ள ஆடலென்க. 'பாடலும்' என்றது, பண்ணல் முதலிய எட்டுவகைப்பட்ட குறிக்கோளாம். அவை,

இன்பந் தெளிவே நிறையோ டொளியே
வன்சொ லிறுதி மந்த முச்சமென
வந்த வெட்டும் பாடலின் பயனே.''

(5) 'பாணி' என்றது தாளங்களாம்; 'தூக்கு' மென்றது:

''ஒருசீர் செந்தூக் கிருசீர் மதலை
முச்சீர் துணிவு நாற்சீர் கோயில்
ஐஞ்சீர் நிவப்பே யறுசீர் கழாலே
எழுசீர் நெடுத்தூக் கென்மனார் புலவர்.''

(6) 'கூடியநெறி' என்றது, கூத்தும் பாட்டும் தாளமும் கூடின நெறியாம். 'குலவுங்காலை' என்றது, ஆட்டு விக்குமிடத்து.

(7) 'ஒற்றை, இரட்டை, முத்திரை, நிருத்தக்கை' யென்றது அங்கவதிகாரத்துட்[1] காண்க.

(11) குரவையும் வரியும் விரவல செலுத்தி;

## குரவை

''குரவை யென்பது கூறுங் காலை
செய்தோர் செய்த காமமும் விறலும்
எய்த வுரைக்கு மியல்பிற் றென்ப.''

## வரிக்கூத்து

''வரிக்கூத் தென்பது[2] வகுக்குங் காலை
பிறந்த நிலனுஞ் சிறந்த தொழிலும்
அறியக் கூறி யாற்றுழி வழங்கல்.''

(12) 'ஆடற்கமைந்தவன் ஆசிரியன்' என்றது, இக் கூத்துக்களை யவற்றுடனே பொருந்த ஆடவும் ஆட்டுவிக்கவும் வல்லவன் ஆடலாசிரியன் என்க. (2)

---

(பா - ம்) 1 அங்காதிகாரத்துட், 2 'வரியெனப் படுவது'

## இசையாசிரியன்

நிறுத்த முறையானே இசையாசிரியன் தன்மை கூறுகின்றார் :

(66) யாழ்குழல் சீர்மிட றாழ்குரற் றண்ணுமை
ஆடல் இசைந்த பாட லிசையுடன்
வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கித்
தேசிகத் திருவி னோசை கடைப்பிடித்
தோசை யெல்லா மாசின் றுணர்ந்த
அறிவின னாகிக் கவியது குறிப்பும்
ஆடற் றொகுதியும் பகுதிப் பாடலும்
வசையறு கேள்வியும் வகுத்து விரிக்கும்
அசையா மரபின னிசையோ னென்ப.

(1) யாழ் - யாழ்ப்பாடலும், குழல் - வங்கியப்பாடலும், சீர் - இருவகைத்தாளக் கூறுபாடுகளும், மிடறு - சாரீர வீணையும்.[1]

(2) ஆடல் - அகக்கூத்து, புறக்கூத்து. பன்னீராடலுடனே, இசைந்த பாடல் - இசையுடன் சொல்லப்பட்ட கூத்துக்களுக்குச் சேரச்செய்த உருக்கள் இசை பொருந்தும்படியும், சுவை பொருந்தும்படியும்.

(3) வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருளியக்கி—செந்துறை வெண்டுறை என்னப்பட்ட இருவகைப் பாடல்களுக்கும் உரிப்பொருளாயமைந்த இயக்கம் நான்கினையும் அமைத்து.

---

(பா - ம்.) 1 'சரீரவீணையும்'

(4) தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்து - இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்று சொல்லப்பட்ட சொற்கள் இசைபூணும் படியைக் கடைப்பிடித்து.

(5-6) ஓசையெல்லாம்[1] ஆசின்றுணர்ந்த அறிவினனாகி - இசைச் சொற்களிற் புணர்ப்புண்ட இசை வேறுபாடுகளையெல்லாம் குற்றந்தீர உணரவல்ல அறிவுடையோனாகி.

(6) கவியது குறிப்பும் - இயற்புலவன் நினைந்த கோட்பாடும்.

(7) ஆடற்றொகுதியும்—ஆடலாசிரியன் ஈடும் மேல் வரவுகளின் தொகுதியும், பகுதிப்பாடலும் - இவற்றின் பகுதிக்கமைந்த பாடலும்.

(8-9) (சேரவியற்றுமிடத்து) வசையறுகேள்வி வகுத்து விரிக்கும் அசையாமரபினன் இசையோன்றானே - இச் சொல்லப்பட்டவற்றைக் குற்றந்தீர நூல் வழக்காலே வகுக்கவும் விரிக்கவும் வல்லன் பாடலாசிரியன் (எ-று.)

'ஓசையெல்லாம்[1] ஆசின்றுணர்ந்த அறிவினனாகி' என்றதனால், இசையின் பத்து அழகும் பத்துக் குற்றமும் வருவிக்கப்பட்டன.

## பத்தழகு

அஃதாவது :

' வியக்தம் பூரணஞ் சுகுமாரா லங்கிருதம்
சமஞ்சுர கதம்சில க்ஷணம்நிக் ருஷ்டம்
மதுரம் பிரகடனம் பத்தும் புகராம்''

---

(பா-ம்.) 1 'இவ்விசை யெல்லாம்'

(இ-ள்.) இப் பத்தும் அழகாமென்றவாறு.

(ப-ம்.) பதங்கள் முதலிய கீர்த்தனங்களைச் சுரத்தின் பிரகிருதி பிரத்தியத்தினாற் பாடுவதை வியக்தம் எனவும், பதங்களைச் சம்பூர்ணமாகப் பாடுவதைப் பூரண மெனவும், பதங்கள் முதலியவற்றைச் சாரீர தருமம் காதுக் கிதமாகப் பாடுவதைச் சுகுமார மெனவும், பதங்களை [மந்தரம், மத்தியமம், தாரம்] முதலியவற்றைப் பரவிப் பரவிப் பாடுவதை அலங்கிருதம் எனவும், பதங்களைத் தாள லயக்கவர விடாமற் பாடுவதைச் சமம் எனவும், பதங்களை வீணை, வேணு, நாகசுரம் முதலிய வாத்தியங்களினாற் பாடி வாசித்துக் காட்டுவதைச் சுரகதம் எனவும், பதங்களை விலம்பம் மத்தியமம், துருதத்தோடும் பாடிக் காட்டுவதை சிலக்ஷணம் எனவும், பதங்களைச் சாரீர தருமம் இல்லாமற் பாடுவதை நிக்ருஷ்டம் எனவும், சாரீரவான்களும் சாரீர தர்மமில்லாதவர் களும் அக்ஷர சுத்தமாய்ச் செவிககின்பமாய்ப் பாடுவதை மதுரம் எனவும், முன் சொன்ன பூரணமே பிரகடனம் எனவும் கூறினார். (3)

(இதற்குமேல் நூலோ உரையோ கிடைக்கவில்லை.)

66

## குறிப்புரை

இச் சூத்திரம் சிலப்பதிகாரத்துள் பின்வருமாறு காணப் படுகிறது :

"யாழும் குழலும் சீரும் மிடறும்
தாழ்குழற் றண்ணுமை யாடலொ டிவற்றின்
இசைந்த பாட லிசையுடன் படுத்து
வரிக்கு மாடற்கு முரிப்பொரு ளியக்கித்
5 தேசிகத் திருவி னோசை கடைப்பிடித்துத்

தேசிகத் திருவி னோசை யெல்லாம்
ஆசின் றுணர்ந்த வறிவின னாகிக்
கவியது குறிப்பு மாடற் றொகுதியும்
பகுதிப் பாடலுங் கொளுத்துங் காலை
வசையறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
அசையா மரபி னிசையோன் றானும்''

(அரங்கேற்று. 26-36.)

*ஆழ்குரல் தண்ணுமை* - *ஆழ்ந்தகுரலினையுடைய பேரிகை படகம் முதலிய தோலாற் செய்யப்பட்ட கருவிகள்.*

*புகர்—அழகு.* உரையில் *அலங்கிருதத்தை* விளக்கும் *அடிகளில் பகரங்களுக்கிடையில் 'மந்தரம், மத்தியமம், தாரம்' என்றிருத்தல்* வேண்டும். *''பாயு மந்தரமத்ய தாரகதி தன்னைப் பரவி நிற்றல் நேய அலங்கிருதப்பேர்''* (மகாபரத சூடாமணி)

பத்துக் குற்றங்களின் விவரம் —(*1*) துஷ்டம் - *அபசுரமாகப் பாடுவது.* (2) அசாஸ்திரம் - *சாஸ்திரஹீனமாகப் பாடுவது.* (*3*) சுருதிவிரோதம் - *சுருதியை விட்டுப்பாடுவது.* (*4*) காலவிரோதம் - *தாளம் விட்டுப் பாடுவது.* (5) புனருக்தம் - *பாடினதையே பாடுவது.* (*6*) கலாபரஹ்யம் - *அசம்பந்தமாய்ப் பாடுவது.* (*7*) கதக்கிரமம் - *வழியைவிட்டுப் பாடுவது.* (8) அபார்த்தம் - *அர்த்தஹீனமாய்ப் பாடுவது.* (*9*) கடினம் - *கானபின்னமாகப் பாடுவது.* (*10*) ஸந்திக்தம் - *சந்தேகத்தோடு கூடியது.* (மகாபரத சூடாமணி)

(முற்றும்)

# சூத்திர முதற் குறிப்பகராதி

[எண்—சூத்திர எண்]


அகத்தியன், 56
அபிநயம் 26
அம்பிகை 42
அமரர்கோன் 50
அயனிருக்கே 48
அரிநர தத்தை 47
அவருள் பார்வதி 24
அவையே உலகிற் 34
அறையதிகார 15
அன்னவளரம்பை 49
அனுமன் 45
ஆகமமேவு 5
ஆகாசசாரி 35
ஆகாரியத்தை 31
ஆதலினைந்து 19
ஆனந்ததாண்டவம் 22
ஆனைமுகன் தாண்டவ 43
ஆனைமுகனாறு 1
இதுவே ஆவாகிகம் 28
இம் முறை 21
இயம்பும் பிரணவ 9
இராகப் பகுப்பை 38
இராவணன் 53
இருவகைக் கூத்தின் 65
இலயத்தில் 13
இலாசியம் 36
இவற்றுளாங்கிகத்தை 27
ஈவ்வொன்றன்மை 64
உத்தம ராசி 4
கந்தன் நால்வகை 44
காளி சதிலயம் 46
சாத்விகாபிநய 32
சாரங்கதேவன் 63
சாற்றிய நாளது 8
சிந்தி ராகம் 40
சுக்கிரன் 52
சூரியன் 54
சொல்போகத்திற் 14
சொல்லும் 6
தத்திலன் 60
தரணியிலுள்ள 29
தாளமுமவற்றின் 41
திருவளருலகில் 2
திரேபவம் 20
தும்புரு 61
தெரிகின்ற 10
நடனம் நாட்டிய 33
நந்திநாட்டிய 55
நாதமிசை 39
நாரதன் 59
படர்க்கை 16
பரதமூன்று 23
பரதமெனும் 3
பாவப்பகுதி 25
பாவமூன்றும் 12
பாவமூன்றோ 18
பிரகஸ்பதி 51
போகத்தவா 17
மானசம் 11
யாழ்குழல் 66
வசிட்டன் 57
வாசிகாபிநயம் 30
வியாசன் 58
விருத்திசித்தம் 37
வீரவல்லபன் 62
வேதியரோது 7

# அரும்பதம் முதலியவற்றின் அகராதி

[எண்—பக்க எண்]


அகக்கூத்து, 52, 53
அகண்டம், 32,
அகத்தியர், 39 45
அங்கக்கிரியை பதினாறு, 46 56-57
அங்கப் பிரமாணம், 37
அங்கம் இன்னதென்பது, 18 46
அங்கம் உபாங்கம், 46
அங்கம், வேதாங்கங்களுக்கு, 47
அங்க வதிகாரம். 57, 59
அசார உணவு, 50
அசுர நாட்டியம், 3
அடக்கு சுரம், 33
அநாகதம், 37
அபிசாரியா காரியம், 26
அபிநயக்கூத்து, 55
அபிநயம், 8, 17, 22
அபிநயம் நால்வகை, 23
அபிநயம் நிகழுமிடத்து ஆடல் நிகழாமை, 53
அபிநயம் யஜுர்வேதசாரம், 42
அல்லியக்கூத்து, 3
அவசரம், 15
அவயவ பேதம், 3, 45
அவரோகணசுரம், 33
அழகு பத்து, 61
அறுவகை நிலை, 56
அனுபாவிக தொந்தம், 24, 25
அனுமன் தும்புரு நாரதர் கர்வம் அடக்கியது. 39
அனுவாதி, 32-33
அஷ்டாதசவாத்தியங்கள், 43
அக்ஷரப் பிரமாணம், 37
ஆகாச சாரி, 5, 30, 49
ஆகாரியத்தின் வகை, 26
ஆகாரியத்தை இருவகையாகச் செய்தவர் பிரகஸ்பதி, 43
ஆகாரியாபிநய இலக்கணம், 23
ஆங்கிகம் ஆறாகச்செய்தவர் பிரகஸ்பதி, 43
ஆங்கிகம் முதலிய நாலும் இந்திரன் செய்தவை, 43
ஆங்கிகாதி அபிநயம், 3
ஆங்கிகாபிநய இலக்கணம், 23 வகை, 24
ஆசிரியன் தன்மை, 51
ஆஞ்ஜனேயவற்கரர், 48
ஆடலாசிரியன் இலக்கணம், 52
ஆதாரங்கள் ஆறு, 37
ஆரோகண சுரம், 32
ஆலீடம், 41
ஆவாவிக தொந்தம், 24
ஆனந்த தாண்டவத்தின் தொகையும் விரியும், 19
ஆனந்த த்ாண்டவம், 2, 3, 5, 18, 19, 52
இசை, 34-6

இசையதிகாரம், 32
இசையாசிரியன் தன்மை, 60
இசையின் அழகும் குற்றமும் 62-3
இடைக்கச்சை, 26
இடைப் பட்டை, 27
இரட்டைக் கை, 53
இராகம், 42, 47
இராஜசேகரன், 45-46
இராஜநாட்டியம், 4
இராவணன், 39, 44
இருவகைக் கூத்து, 52-55
இருவகைப் பாடல், 60
இலயம் 14, 15, 23
இலயநாட்டியம், 4
இலாசியம், 30
இலாட்சணிகாபிநயம், 25
ஈக்ஷணா விருத்தி, 3
உக்கிர தாண்டவம், 2, 4
உச்சிப்பூ, 27
உத்தான தாண்டவம், 45
உத்யுக்தர், 15
உபகீத வாசிகாபிநயம், 26
உபசப்த வாசிகாபிநயம், 26
உபயரங்கம், 58
உபாங்கம், 46
உருக்கள், 60
உற்பவம் முப்பத்திரண்டு, 5, 6
உஷாதேவி, 48
ஐங்கிருத்தியம்-ஐவகைத் தொழில், 17, 18
ஐந்து தத்துவங்கள், 18
ஐந்து, மூன்றில் அடங்கல், 19
ஐவகைப் பரதம், 56, 57
ஒற்றைக்கை, 53
ஔடவம், 32
கஞ்சக்கருவி, 45, 48
கடபயாதி சங்கியை, 32, 35
கண்டத்தொனி, 48
கண்டம், 32
கணபதி செய்தவை தாண்டவ முதலிய ஐந்து, 37
கபாலக்கூத்து, 4
கரகிருதம், 17
கரணம், 56
கரநாட்டியம், 3
கருடி நாட்டியம், 4
கலிநடம், 55, 56
கழாய்க் கூத்து, 56
களைக்கூத்து, 8
காகபதம், 37
காந்தாரக்கிராமம், 33
காரணத்துவ அவசரங்கள், 15
காளிதாண்டவம், 2, 4
காற்சல்லடம், 26
கிஞ்சுரர் நாட்டியம், 4
கிராமம்—சுரக்கூட்டம், 33
கீதம் சாமவேதசாரம், 42
கீதவாசிகாபிநயம், 43
குடக்கூத்து, 3, 55
குடைக்கூத்து, 5
குண்டக்கிரியா, 39
குண்டலநாட்டியம், 4
குமாரலாசியம், 30
குரவை, 53, 55, 59
குரு, 37
குற்றம் பத்து, 63
கூத்துப் பதின்மூன்று, 5
கூத்து, பாட்டு, தாளம், 53
கை நால்வகை, 53

கொடிக்கூத்து, 3
கோகளன், 47
கௌரீகட்கம், 21-2
கௌரீ தாண்டவம், 2
சக்தன், 15
சக்திதாண்டவம், 46
சங்கார தாண்டவம், 2, 4
சங்கீத வாசிகாபிநயம், 26
சங்கீரணம், 32
சச்சபுடம், 37
சட்ஜக்கிராமம், 33
சதி நாட்டியம், 3
சந்தியா தாண்டவம், 2, 3, 5
சப்த சுரங்கள், 32, 44
சப்த வாசிகாபிநயம், 43
சம்பூரணம், 32
சம்வாதி, 32-33
சன்னியராகத் தொகை, 32, 39, 47
சாக்குசிய சாத்விகாபிநயம், 27
சாத்விகம் இருவகை, 43
சாத்விகாபிநயம், 23, 27
சாந்திக்கூத்து, 55
சாந்தோக்ய உபநிஷத், 13
சாயிமுதலிய நான்கு, 46
சாரங்க தேவன், 49
சாரி மூன்று, 30
சாரீர வீணை, 60
சாளவம், 32
சிங்களநாட்டியம், 4
சிங்காரசேகரன், 49
சிங்கார நாட்டியம், 3
சித்த விருத்தி, 31
சித்திர நாட்டியம், 4, 39
சிந்து—கீர்த்தனை, கிருதி, 35
சிலப்பதிகாரம், 8, 22, 40, 53, 62
சிவதாண்டவம், 46
சீவகசிந்தாமணி, 22
சுக்கிரர், 44
சுகுமாரலாசியம், 31, 45
சுசப்த வாசுகாபிநயம், 26
சுத்த சத்துவம், 8
சுத்த சாரி, 48
சுத்த தாண்டவம், 2, 3, 5
சுத்தானந்தப்பிரகாசம், 13, 40 41, 54
சுரக்கூட்டம், 33
சுரங்கள் ஏழையும் வெளியிட்டவன் இராவணன், 44
சுரப்பிரத்தாரம், 32
சுரம், 47
சுவாதிட்டானம், 37
சூசிகாபிநயம், 24
சூரியன், 45
செந்துறை 60
சொக்கம் 55
சொற்கட்டு 26
சோமநாதன், 49
தசப்பிராணயுக்தம், 36
தட்டடைவு, 48
தண்டு முனிவர், 42
தத்திலன், 47
தாண்டவபதி சிவபெருமான் 2, 20
தாண்டவம் நூற்றெட்டு; பன்னிரண்டு, 28
தாண்டவலாசியம், 31
தாது ஏழிலிருந்து ஏழு சுரம். 44
தாரம், 32
தாழம்பூ—ஓர் அணி, 27
தாளம், 37

தாள வதிகாரம், 37
தாளாங்க நாட்டியம், 5
தாளாவசரம், 16
திரிபுரதாண்டவம், 6
துடிக்கூத்து 5
துத்தம் 32
தும்புரு 39
தும்புருநாரதர் கர்வமடங்கியது 39
துருதம் 37
துலாக்கோலியல்பு 51
துவாதசப் பிராணயுக்தம் 32
துளைக் கருவி 45
தூக்குவகை 59
தேசிசாரி 5, 30, 48
தேசி வடுகு சிங்களம் 55
தேவியார் ஆடலாசிரியர் 13
தொந்தாபிநயம் 24
தொனியாத்மகம் 8, 35, 42
தோள்வளை 27
தோற்கருவி 45
தோற்பாவை 56
நடசேகரன் 43
நடன இலக்கணம் 28-9
நடன முதலிய ஐந்து 28
நந்திகேசுவரர் 45
நரப்புக்கருவி 47
நவரசம் 3, 8
நாகசுரம் 45
நாட்டியம் 28; இருநூற்றுப் பதினாறு 39; இருபத்து நான்கு 5; நால்வகை 48
நாடக இலக்கணம் 28, 52
நாதப் பிரமம் 8
நாதம் 35; வகைப்படுத்தியவர் திருமால் 42
நாதாத்மகம், 8, 35, 42
நாரதன், 39, 47
நால்வகைச்சொல், 61
நாலுயுகத்தாரின் உணவு, 50
நியாயா மகத்துவம், 17
நிருத்தக்கை, 56
நிருத்தக்கை முப்பத்திரண்டு, 57
நிருத்த கணபதி, 37
நிருத்தம், 28-30, 45
நிருத்தாங்கம், 50
நிருத்தியம், 28-30, 45
நிலத்தின் இயல்பு, 51
நிஜா காரியம், 27
பட்டஜம், 5, 8, 39, 41
பண், 35, 36
பண்ணல் முதலிய குறிக்கோள் 58
பதசாரஷடங்கம், 3
பதினெண்சித்தர், 38
பரத கர்த்தாக்கள், 37
பரத சாஸ்திரம், 20
பரத சாஸ்திரம் உபதேசிக்கப் பெற்ற பெண்கள். 48-49
பாத நாட்டியம் அபிநயம் நான்கும் கூடியது, 23
பரதம் பெண்பாலாரிடம் விளக்க முறும், 12
பரதம் முதல் நூல், 12
பரத முனி, 48
பரத மூன்றும் முத்தேவர் வடிவம், 20
பரத மென்ற பெயர், 5
பரமசிவன் நிருத்தத்திற்குந் தேவியார் ஆடலாசிரியர், 13
பவித்து-தோன்றி, 3

பன்னிருகூத்து 52
பா 35
பாடலின் பயன் எட்டு 51
பாண்டரங்கக்கூத்து 3
பாணி-தாளம் 58
பாத்திரம் 26
பாதக்கிரமம்-அடைவு 17
பாதகிருதம் 17
பாதசாரி நாட்டியம் 5
பாதம் 20 40, 41
பாவம் இன்னதென்பது 6,22
பாவம் நால்வகை 38, 43
பாவமுதலிய ஐந்து 17 - 8
பாவ முதலியன அங்கம் எனப்படும் 19
பாவ ராக தாளங்களைப் பலர் கூறும் விதம் 14
பாவராகதாளம் 5
பாவஜாபிநயம் 24
பாவாபாவ நாட்டியம் 5
பாவாவசரம் 15
பாவிகதொந்தம் 24
பாவியவிருத்தி 31
பாவைக் கூத்து 4
பிரகஸ்பதி 43
பிரத்யாலீடம் 41
பிரவிர்த்தர் 15
பிரளய தாண்டவம் 2, 3. 5
புட்கள்-ஜீவகோடிகள் 17
புத்தியாரம்பானுபவம் 38
புலுதம் 37
புறக்கூத்து 53
புற நாடகங்கள் 53
புஜங்க தாண்டவம் 2, 3, 5
பூசாரி 30, 49
பூசாரி நாட்டியம் 5
பூததாண்டவம் 2, 5
பூவின் இயல்பு 51
பெண்களில் பரத சாஸ்திரம் கற்றவர்கள் 48-49
பேரணி 41
பேரணி நாட்டியம் 3
போச மன்னன் 48
மகாசபல நாட்டியம் 5
மகாபரதசூடாமணி 48
மணிபூரகம் 37
மத்யமக்கிராமம் 33
மத்யமம் 32
மதங்கர் 38
மதங்கியார் 8
மந்தரம் 32
மரக்காற் கூத்து 4
மல்லுக் கூத்து 4
மலையின் தன்மை 51
மனிதரின் சுவாசக் கணக்கு 50
மிடறு 60
முகசாலியம் 40
முகசாளைய நாட்டியம் 3
முத்திரைக்கை 59
முனிதாண்டவம் 2, 4
மூர்ச்சை-மூர்ச்சனை 32
மெய்க்கூத்தின்விரி 55
மேகலாபாரம் 26
மேளகர்த்தா ராகம் எழுபத்திரண்டு, 34
யோக நாட்டியம் 4
லகு 37
லயம் 39
வங்கியம்-குழல் 60
வசிட்டன் 46
வசைக்கூத்து 57

வரிக்கூத்திலக்கணம் 59
வருணாத்மகம் 8,
31, 32, 37
வருத்தனை நான்கு 54, 57
வாசிகத்தை இருவகையாகச் செய்தவர் பிரகஸ்பதி 43
வாசிகாபிநயம், 23; வகை, 26
வாத்திய இலக்கணம் 47
வாத்திய வகை 43, 45
வாதி 32, 33
வாயுதேவர் 38
விக்கிரமன் 48
விநோதக்கூத்து 55, 57
வியஞ்சகரபிநயம் 27
வியபிசாரியாகாரியம் 26
வியஜாகாரியம் 26
வியாச கடகம் 47
விருத்தி இரண்டு 31
விலக்குறுப்பு 52, 58
விவாதி 33
விஸ்தாரம் 47
வீணா 8
வீரவல்லபன் 47
வெண்டுறை 60
வெறிக்கூத்து 5
வென்றிக்கூத்து 5
வேணு 8
வேதங்களின் ஓசை 44
வேதாங்கமாறுக்கும் உடலுறுப்புக்கள் ஆறு உவமை 46
வைசாகம் 41
வைஷ்ணவம் 41
ஸ்தம்பநாட்டியம் 3
ஷட்ஜாதிக்கிராம மூர்ச்சனை 33
ஷாடவம் 32

கீழ்வருவனவற்றுள் தடித்த எழுத்திலுள்ளவைபோக மற்றவை சிலப்பதிகாரத்துள் அரும்பதவுரை யாசிரியராலும் அடியார்க்கு நல்லாராலும் மேற்கோளாக எடுத்தாளப் பெற்றுள்ளன.

அறுவகைநிலை 56
இதுவும் 58
இன்பந் தெளிவே 58
ஒரு சீர்செந் 59
குரவையென்பது 59
சமநிலை 57
சாந்திக்கூத்தும் 55
சாந்திக்கூத்தே 55
துலாக்கோல் 51
நிலத்தினியல்பே 51
பல்வகையுரு 57
பூவினதியல்பே 51
மலையே 61
மாற்றானொடுக்கமும் 57
விரிக்கூத்தென்பது 59
வியக்தம் 61
விநோதக் 58

# சில திருத்தங்கள்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 2 | 15 | பகுதிசால் | பகுதிகள் |
| 5 | 25 | சுத்தியும் | சுருதியும் |
| 9 | 9 | பகருமதன் | பகரமதன் |
| 11 | 6 | சோதியும் ராசியும் | சோதிராசி |
| 16 | 21 | மோட்க் | மோட்ச |
| 21 | 16 | பிழிந்து | பொழிந்து |
| 21 | 17 | வாழச் | வாழ்கெனச் |
| 23 | 24 | சூசிகா பாவசா | சூசிக பாவச |
| 25 | 8 | பாடகந்தான் | பாடகன்றான் |
| 32 | 11 | நிஷதம் | நிஷாதம் |
| 32 | 12 | மந்திரம் | மந்தரம் |